உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-144

ஆகஸ்ட் 16-31, 2022

விருப்ப சந்தா இதழ்




## கடன் வாங்கிய பெருமாள் சாட்சி கையெழுத்திட்ட சுகப்பிரம்ம மகரிஷி

# நினைத்தது நிறைவேற்றும் விபூதி விநாயகர்!



விநாயகர் பல்வேறு வடிவங்களில் உல கெங்கிலும் காட்சியளித்தாலும் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் உள்ள விபூதி விநாயகருக்கு சிறப்புகள் அதிகம்.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் பொற் றாமரை குளக்கரையில் கன்னிமூலையான தென்மேற்கில் வீற்றிருக்கிறார் விபூதி விநாயகர்.

பக்தர்கள் தங்கள் கைகளாலேயே திருநீறு அபிஷேகம் செய்து இவரை வழி படுவது சிறப்பு. மகம், உத்திரம், விசாகம், கேட்டை, பூராடம் நட்சத்திர நாட்களில் இந்த விபூதி விநாயகருக்கு திருநீற்றால் அபிஷேகம் செய்தால், எண்ணிய எண்ணம் விரைவில் நிறைவேறும் என்பது ஐதீகம்.

மீனாட்சி அம்மனையும், சுந்தரேஸ்வரரை யும் வழிபட்டுச் செல்லும் பக்தர்கள், தாங்கள் கொண்டு வரும் விபூதியை இந்த விநாயகருக்கு, தங்கள் கரங்களாலேயே அபிஷேகம் செய்து வணங்குகிறார்கள்.

# இலக்கை மற்றவரிடம் கூறாமல் மறைத்தால் நினைத்த காரியத்தில் எளிதாக வெற்றியடையலாம்

நாம் எந்த செயலைச் செய்யும் போதும் அதன் இலக்குகளை மற்றவருடன் பகிர்ந்துகொள்ளக் கூடாது. ஏன்னென்றால் நமது சப்கான்சியஸ் (subconscious mind) உள்ளம் அதாவது ஆழ்மனம், மிகவும் சக்தி வாய்ந்தது. நீங்கள் உங்கள் இலக்குகளை (Goals ) பிறருடன் பகிந்துகொள்ளும்போது, நமது ஆழ்மனம் அதை உண்மை என நம்பி விடுகிறது.

நமது வெளிமனம் (conscious mind) சிறியது. ஆனால் ஆழ்மனம் (subconscious mind) மிக பெரியது, சக்தி வாய்ந்தது. அதனால் எதை வேண்டுமானாலும் சாதிக்க முடியும். ஆனால் பெரும் பலான நேரம் நாம் சொல்வதை உண்மை என நம்பி விடுகிறது.



நீங்கள் உங்கள் கோல்ஸ் அதாவது இலக்குகளை வெளியே சொல்லும்போது, அவை நிறைவேறி விட்டதாக ஆழ்மனம் முடிவு செய்து விடுகிறது.

அதன் விளைவாக அது அந்த விஷயத்தில் அது செயலாற்றுவதை நிறுத்தி விடுகிறது. ஆழ்மனம் வேலை செய்யா விட்டால் நாம் நினைத்ததை அடைய முடியாது. ஆகவே நாம் எக்காரணத்தை கொண்டும் நமது இலக்குகளை (goals ) வெள்ளியில் யாரிடமும் சொல்லக் கூடாது. அவை நிறைவேறியபின் எல்லோரும் தெரிந்து கொள்ளத்தானே போகிறார்கள், அதுவரை நமது இலக்குகளை நம் மனதில் பாதுகாக்கவேண்டும். இது எளிமையாக வெற்றியடையவுதம் ஒரு வழிமுறையாகும்.

# மரகத லிங்கத்தை வழிபாட்டால் கிடைக்கும் பலன்கள்!!!

சில குறிப்பிட்ட ரத்தினங்களுக்கு ஆக்ரஷன் சக்தி உண்டு. அப்படி புதனுக்கு உகந்த மரகத லிங்கத்தை நாம் வணங்கி வர நம் மனக்குறைகள் நீங்கி நாம் நினைத்த வரத்தைப் பெறலாம்.

நவகிரகத்தில் இளவரசன் என அழைக்கப்படுவது புதன் பகவான். புதனுக்கு உரிய ரத்தினமாக மரகதத்தால் செய்யப்பட்ட சிவ லிங்கத்தை நாம் வழிபாடு செய்வதால் நாம் கேட்ட வரம் தருவார் என்பது ஆன்மிக முன்னோர்களின் வாக்கு.

மரக லிங்கத்தை வழிபட்டு வர ஆரோக்கியம், கல்வி, பெரிய பதவி, அரசருக்கு அடுத்த பதவியைத் தரக்கூடிய யோகத்தைப் பெறலாம். அதோடு நம்முடைய தொழில், வியாபாரம் விருத்தி அடையவும், உத்தியோகத்தில் நினைத்த உயரத்தை அடையவும் இந்த மரகத லிங்க வழிபாடு மிகப்பெரிய வரப்பிரசாதமாகும்.

மேலும், மரகத லிங்கத்தை இந்திரன் வழிப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன.

எனவே, மரகத லிங்கத்தை வழிபடுவதன் மூலம் கேட்ட வரத்தை, கேட்டவுடன் பெற முடியும்.

சில குறிப்பிட்ட ரத்தினங்களுக்கு ஆக்ரஷ்ன சக்தி உண்டு. கல்வி, ஆரோக்கியம், அரசருக்கு நெருக்கமான பதவிகளில் அமரும் யோகத்தை மரகத லிங்கம் தரக்கூடிய வல்லமை படைத்தது.

இதுமட்டுமின்றி வியாபாரத்தில் விருத்தி அம்சம் பெறவும், சகல விதமான தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற முடியும்.

அதே போல மரகத லிங்கத்தின் மேல் சாற்றப்படும் சந்தனத்தைப் பூசிக்கொள்வதால் நல்ல மருத்துவ பலனைத் தரும் என்று கூறப்படுகிறது.

சோழ சக்கரவர்த்தி முசுகுந்தா (12 ஆம் நூற்றாண்டு) கடும் தவம் செய்து ஏழு மரகத சிவலிங்கங்களை, தேவர்களின் அரசன் இந்திரனிடமிருந்து பெற்றான்.

அந்த விலைமதிக்க முடியாத மரகதலிங்கங்களை வேதாரண்யம், திருக்குவளை, திருக்கரவாசல், திருவாரூர், திருநள்ளாறு, நாகப்பட்டினம், திருவாயுமூர் ஆகிய ஏழு இடங்களில் மக்கள் வழிபாட்டிற்காக சிவ ஆலயங்களில் (சப்த விடங்க தலங்கள்) அமைத்து திருக்கோயில் எழுப்பினார்.


ஆன்மிகமலர்

மரகதலிங்களுக்கு செய்யப்படும் பால் அபிஷேகம் மிகச்சிறந்த மருத்துவ சக்தியைக் கொண்டது.

அரிய வகை மரகத லிங்கங்கள், மாணிக்க லிங்கங்கள், கருநீல லிங்கங்கள், கனக புஷ்பராக லிங்கங்கள் என பலவகை லிங்கங்கள் உள்ளது.

# நன்மைகளை கூட்டிவரும் ஆவணி மாதம்

ஆடிபோய்ஆவணி வந்தால் நன்மை கூடிவரும் என்பார்கள், அப்படியென்ன சிறப்பு ஆவணி மாதத்தில் வரும் என்பதை பார்ப்போம்!

தமிழ் மாதங்களில் ஒவ்வொன்றிற்கும் தனி முக்கியத்துவம் உண்டு. சித்திரை தொடங்கி பங்குனி வரை பல்வேறு விசேஷங்கள் வருவதுண்டு.

அதில், ஒரு சில மாதங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

'ஆடி போய் ஆவணி வந்தால் நன்மை கூடி வரும்" என்பதைப் போல் ஆவணி மாதம் மிகச் சிறந்த மாதமாகக் கருதப்படுகிறது.

ஆவணி மாதம் ஸ்திர மாதம். வைகாசி, கார்த்திகை, மாசி ஆகியவையும் ஸ்திர மாதங்களே.

ஆனால், ஆவணியில் சூரியன் தன் சொந்த வீட்டில் ஆட்சி பெற்று வலுவாக அமர்கிறார்.


சூரியனே ஆத்ம காரகன் என்றும், பிதுர்காரகன் என்றும் அழைக்கப்படுகிறார். இதன் காரணமாக சூரியன் வலுப்பெறும்போது எந்த காரியத்தை செய்தாலும் சிறப்பான பலனைத் தரும்.

ஆடியில் சில நிகழ்ச்சிகள் செய்யமாட்டார்கள். ஆவணி தொடங்கியதும், உடனே அந்த நிகழ்ச்சியினை வைத்துவிடுவார்கள்.

ஆவணி மாதத்தில் விநாயகர் அவதாரம், கிருஷ்ணாவதாரம் ஆகியன நிகழ்ந்ததாக சொல்வார்கள்.

ஆவணி மாதம் வரும் ஞாயிற்றுக்கிழமை விரதம் இருப்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஏனெனில் ஞாயிறு என்றாலே சூரியன்.

அது மட்டுமின்றி, ஆவணி மாதத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைதோறும் காலை 6.00 முதல் 7.00 மணி வரை சூரிய ஓரையே இருக்கும்.





ஆவணியில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஆன்மீக அறிவைப் புகட்டினால், அவர்கள் அதில் சிறந்து விளங்குவார்கள்.

தேகநலனுக்காக சூரிய நமஸ்காரப் பயிற்சி எடுப்பவர்கள் ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் தொடங்குவது மிகவும் விசேஷமாகும்.



கீதா–ராஜன்

கிருஷ்ண ஜெயந்தி ஆண்டு தோறும் கிருஷ்ணரின் பிறப்பைக் கொண்டாடுகிற விழாவாகும்.

ஆவணி மாதம் ரோகிணி நட்சத்திர நாளில் கோகுலாஷ்டமி வருகிறது.

கிருஷ்ணர் அஷ்டமி திதியன்று நள்ளிரவில் பிறந்ததால் என்று அஷ்டமி நள்ளிரவில் வருகிறதோ அன்று கோகுலாஷ்டமி கொண்டாடப் படுகிறது.

ரோகிணி நட்சத்திரமும், அஷ்டமியும் சேர்ந்து வந்தால் அது இரட்டிப்பு சந்தோஷத்தை தரும்.

முழுமுதற் கடவுளான விநாயகரின் முக்கியமான திருவிழா விநாயகர் சதுர்த்தி ஆகும்.

ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தி திதியை விநாயகர் சதுர்த்தி என்று அழைக்கின்றோம்.

ஆவணி மாதத்தில் கிரகப்பிரவேசம் செய்தால் அந்த வீட்டில் நீண்ட நாட்கள் தங்கலாம்.

திருமணம் செய்தால் வாழ்க்கை சிறப்பாக அமையும். விவசாயத்திலும் ஆவணி மாதம் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது.

ஆடிப் பட்டம் தேடி விதைக்கும் விவசாயிகள், ஆவணி மாதத்தில் சற்றே ஓய்வு எடுத்துக் கொள்வதுடன், ஒட்டுமொத்த வேளாண் மக்களும் தங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விஷயங்களை, விழாக்களை நடத்தி மகிழ்வார்கள்.

இத்தகைய சிறப்பம்சம் நிறைந்த ஆவணி மாத வளர்பிறையில் கடவுளை மனமுருகிப் பூஜித்து அனைத்து நலன்களையும் பெறலாம்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203





## கொடிய சாபத்தையும் தீர்க்கும்

# கருஞ்சீரக எண்ணெய்

நாம் பெறப்பட்ட சாபத்திற்கு, விமோசனம் கிடைப்பது என்பது அவ்வளவு சுலபமான விஷயம் அல்ல. வயிறு எரிந்து அடுத்தவர்கள் விட்ட சாபத்திற்கான தண்டனையை ஒரு நாள் இல்லை என்றாலும் ஒரு நாள் நாம் அனுபவித்தே தீரவேண்டும். சாபங்களில் நிறைய வகை உண்டு. சண்டையில் அடுத்தவர்கள் விட்ட சாபம், பித்ரு சாபம், பெண் சாபம், இப்படியாக மனிதர்களால் மட்டும்தான் நமக்கு சாபம் கிடைக்கும் என்பது கிடையாது. புழு, பூச்சிகள், விலங்குகள் இப்படி வாயில்லா ஜீவன்களிடம் இருந்தும் நமக்கு சாபம் கிடைக்கும். கண்ணுக்கு தெரிந்த ஜாதகத்தில் இருக்கக்கூடிய சாபங்கள், கண்ணுக்குத் தெரியாத போன ஜென்மத்தில் நம்முடைய முன்னோர்கள் வாங்கிய சாபங்கள் என்று நம்மை கர்மவினைகள் தொடர்ந்து வந்து கொண்டே தான் இருக்கின்றது.

இப்படியாக கண்ணுக்குத் தெரிந்த, கண்ணுக்கு தெரியாத எப்பேர்பட்ட சாபங்களாக இருந்தாலும், அதில் இருந்து விமோசனம்

பெறுவதற்கு நம்முடைய முன்னோர்கள் ஒரு சுலபமான பரிகாரத்தை சொல்லிவிட்டுத் தான் சென்றுள்ளார்கள். அது என்ன பரிகாரம்? அந்த பரிகாரத்தை எப்படி செய்ய வேண்டும்.

கருஞ்சீரகத்தில் மருத்துவ குணம் அதிக மாகவே உள்ளது. இது நாம் எல்லோரும் அறிந்த ஒரு விஷயம்தான். மருத்துவ குணத்தோடு இதற்கு ஆன்மீக ரீதியான மகத்துவமும் அதிகம். கருஞ்சீரகத்திலிருந்து பெறப்பட்ட சுத்தமான கருஞ்சீரக எண்ணெயை வைத்து தான் இந்த பரிகாரமே சொல்லப்பட்டுள்ளது. நாட்டு மருந்து கடைகளில் கருஞ்சீரக எண்ணெயை கொஞ்சம் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். இதனுடன் வெட்டிவேரையும் வாங்கிக் கொள்ள வேண்டும். கருஞ்சீரக எண்ணெயின் வெட்டிவேரைப் போட்டு ஊறவைத்து விடுங்கள்.

இதற்கு அளவுகள் எல்லாம் கிடையாது. 100 கிராம் அளவு கருஞ்சீரக எண்ணெயை வாங்கினால், 10 கிராம் வெட்டிவேர், போட்டு ஊற வைத்துக் கொள்ளலாம். தயார் செய்த இந்த எண்ணெயை அப்படியே தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளலாம். அஷ்டமி நவமி திதிகளில் இந்த கருஞ்சீரக எண்ணெயை ஒரு சொட்டு தொட்டு, உங்களுடைய உச்சந் தலையில் லேசாக வைக்க வேண்டும். இரண்டு காதின் மேல் பகுதிகளிலும் லேசாக வைக்க வேண்டும்.

அதாவது லேசாக தடவிக்கொண்டு தலை ஸ்னானம் செய்து விட்டால் போதும். இப்படி ஒரு முறை செய்தாலே உங்களை துரத்தும் சாபத்திற்கு விமோசனம் கிடைத்து விடும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதி அற்புதம் வாய்ந்த இந்த பரிகாரத்தை நீண்ட நாட்களுக்கு முன்பே நம்முடைய முன்னோர்கள் பயன்படுத்தி வந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

சிலர் விட்ட சாபங்கள் உடனே பலிக்கும். சிலர் விட்டு சாபங்கள் இரண்டு மூன்று தலை முறை தாண்டி வரக்கூடிய சந்ததியினரை கூட பாதிக்கும் என்று சொல்லுவார்கள். உங்களுடைய குடும்பத்திற்கும் இப்படி ஏதாவது ஒரு பிரச்சனை இருந்து வந்தால், சாபத்தின் மூலம் தான் அந்த பிரச்சனை வர காரணம் என்று உங்களுக்கு தெரிந்தால், சுலபமான இந்த பரிகாரத்தை செய்து பாருங்கள்.

நிச்சயமாக நல்ல பலன் தெரியும். மாதம்தோறும் வரும் அஷ்டமி நவமி திதிகளில் இந்த கருஞ்சீரக எண்ணெய் தலை குளியலை செய்து வாருங்கள். இத்தனை நாட்கள் தான் செய்யவேண்டும் என்ற எந்த அவசியமும் கிடையாது. மூன்று மாதங்கள் தொடர்ந்து செய்தால் நல்ல பலனைப் பெறலாம்.

# பக்தர்களுக்காக விரதமிருக்கும் அம்மன்



எந்த அம்மன் கோவிலிலும் இல்லாத ஒரு சிறப்பு சமயபுரம் மாரியம்மனுக்கு உள்ளது.

பொதுவாக எல்லா கோவில்களிலும்அம்பாளுக்கு பக்தர்கள்தான் விரதம் இருப்பார்கள், ஆனால் சமயபுரம் மாரியம்மன் பக்தர்களின் நலனுக்காக தானே விரதம் மேற்கொள்ளும் வைபவம் நடைபெறுகிறது.

இந்த விரதத்திற்கு பெயர் ‘பச்சைப் பட்டினி விரதம்’ மாசி மாதக் கடைசி ஞாயிறன்று நடைபெறும் பூச்சொரிதல் திருவிழாவுடன் அம்மனின் இந்த விரதம் துவங்குகிறது.

தன்னை நாடி வரும் பக்தர்கள் நலனுடன் இருக்க அம்மனே ஏற்கும் இந்த விரதம் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

உலககெங்கிலுமிருந்து சமயபுரத்தாள் பக்தர்கள் இந்த பச்சைப்பட்டினி விரத நிகழ்வில் கலந்து கொள்கின்றனர்.



# பாரத்தை ஏற்றுபவனல்ல இறக்கி வைப்பவன்

ஒரு நாள் ஒரு கிணறு அருகில் ஒரு கோபிகை ஸ்த்ரீ தண்ணீர் குடத்தை யாராவது தூக்கி விடுவார்களா என எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தாள்.

அப்போது அங்கே சிறுவனான ஸ்ரீகிருஷ்ணன் வந்து கொண்டிருந்தான்.

கிருஷ்ணனைப் பார்த்த அந்த கோபிகை தண்ணீர் குடத்தை தூக்குவதற்காக கிருஷ்ணனை கூப்பிட்டாள்.

கிருஷ்ணனோ கூப்பிட்ட குரல் கேட்காதது போல சிறிதும் கவனிக்காமல்போய்க்கொண்டிருந்தான்.

கோபிகையோ கிருஷ்ணனை கூப்பிட்டு கூப்பிட்டு தொண்டை வரண்டு விட்டது.

கிருஷ்ணனோ திரும்பிகூட பாராமல் போய் விட்டான்.

ஒருவழியாக கோபிகை நீர் நிறைந்த குடத்தை தலையில் சுமந்தபடி தன் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள். தன் வீடு வந்தவள் அதிர்ந்தாள்.

அங்கே ஸ்ரீகிருஷ்ணன் அவள் வீட்டு வாசலில்அவளுக்காககாத்திருந்தான். கோபிகைவாசல் அருகே வந்ததும் தானே முன்வந்து நீர் நிறைந்த குடத்தை கீழே இறக்கி வைத்தான்.

உடனே கோபிகை கிருஷ்ணா குடத்தை தூக்குவதற்காக உன்னை அழைத்தபோது நீ திரும்பிகூட பாராமல் சென்றுவிட்டாய்.

இப்போது கூப்பிடாமல் குடத்தை இறக்கி உதவி செய்தாயே ஏன்? என்று கேட்டாள்.

அதற்கு ஸ்ரீகிருஷ்ணன் தன் மந்தகாச இனிமையான புன்சிரிப்போடு மெதுவாக கோபிகையிடம் இப்படி கூறினான்.

**நான் பாரத்தை இறக்கி வைப்பவன் ஏற்றுபவனல்ல.**

# விரைவில்....

நமது இதழில்

# ஆன்மிகமலர்கள்

பகுதி அறிமுகப்படுத்தவிருகிறோம்

| |
|---|
| ஆன்மிகத்தில் சேவை செய்யும் அன்பர்கள் |
| தொண்டுள்ளம் கொண்ட அன்பர்கள் |
| இயற்கை வைத்திய முறையை சிறப்பாக செய்யும் அன்பர்கள் |
| ஆன்மிக சேவை அன்பர்கள் |

**மேற்கண்ட அன்பர்களை நமது இதழின் வாயிலாக ஆன்மிக உலகத்திற்கு அறிமுகப்படுத்தவிருக்கிறோம்.**

மேலும் விபரங்களுக்க

**9444228203**

# திருமணக் கடன் வாங்கிய பெருமாள் சாட்சி கையெழுத்திட்ட சுகப்பிரம்ம மகரிஷி

## வாழ்வை வளமாக்கும் அற்புத முனிவர்

வியாச மகரிஷிக்கும், கந்தர்வ கன்னிகைக்கும் புதல்வராக அவதரித்தார் ‘சுகர்’ என்னும் "சுகப்பிரம்ம மகரிஷி'. இவர் இந்த உலகில் முதன் முதலில் தோன்றியதே 12 வயது பாலகனாகத்தான் என்று கூறப்படுகிறது.

தாயைப் போலவே கிளி (சுக) முகம் கொண்டவராக விளங்கியதால் ‘‘சுகர்’’ என அழைக்கப்பட்டார். மகாபாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல விநாயகப்பெருமான் எழுதியவுடன், வியாசர் தன் மகன் சுகரை அழைத்து முழு மகாபாரதத்தையும் கற்றுக் கொடுத்தார்.

ஆன்மிகமலர்

வியாசரின் போதனைகள் அவருக்கு வைராக்கியத்தைஅளித்தது. இளம் வயதிலேயே அனைத்தும் உணர்ந்த ஞானியாக விளங்கினார்.

பிரம்மச்சாரியான சுகர் ஓரிடத்தில் நிலையாகத் தங்காமல் தேசாந்திரம் சென்றபடி இருப்பார். அது அவரது இயல்பு.


ஒருமுறை வியாசர் அவரைத் தேடி வந்தார்.

"புத்ரா, புத்ரா' என்று அழைத்தவாறு வனத்தில் நடந்து செல்கையில் அங்கிருந்த மிருகங்கள், பறவைகள், மரங்கள் எல்லாம் "இதோ நான் இருக்கிறேன்!" என்று பதில் அளித்ததாம்.

அப்பேர்பட்ட எங்கும் வியாபித்துள்ளபிரம்ம ஞானி "சுகர்" ஆவார். பாரபட்சமற்ற மனப்பான்மை உடையவர்.

முனிவர் ஒருவரது சாபத்தினால்"பரீக்ஷித் மகாராஜாவுக்கு (அபிமன்யுவின் மகன்) பாம்பினால் ஏழு நாள்களில் மரணம்சம்பவிக்கும்' என்ற நிலை ஏற்பட்டபோது சுகர், தானே வலியச் சென்று பார்த்து ஸ்ரீமத் பாகவத புராணம்முழுவதையும் அந்த ஏழுநாள்களுக்குள் பிரசங்கம் செய்து, பரீக்ஷித் மகாராஜா நற்கதி அடையும்படி செய்தார்.





சந்நிதி உண்டு. சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்தில் தெத்திகிரிப்பட்டி கிராமத்தில் உள்ள அபய ஆஞ்சநேயர் ஆலயத்திலும் சுகருக்கு தனி சந்நிதி அமைந்துள்ளது.

சென்னை தியாகராய நகரில் சுகப்பிரம்ம மகரிஷி ஆசிரமமும், அடையாறு மத்ய கைலாஷ் ஆலயத்தில் தனி சந்நிதியும் உள்ளது. கடலூர் மாவட்டம் திருவந்திபுரம் அருகில் பில்லாலி தொட்டி என்ற கிராமத்தில் சுகருக்கு அருட்பீடம் உள்ளது. இங்கு பிரதான மூர்த்தியாக தனது சீடர் மார்க்கண்டேயருடன் சுகர் காட்சியளிக்கின்றார்.

வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இங்கு விசேஷ வழிபாடுகள் நடைபெறுகின்றன. பக்தர்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற வேண்டி இக்கோயிலுக்கு வருகை புரிகிறார்கள். பலன் அடைகிறார்கள்.

ஸ்ரீ சுகப்பிரம்ம மகரிஷி அவதரித்தது ஓர் ஆனி மாதம், திருவோணம் நட்சத்திர தின மாகும். அந்த நாளில் அவரது ஜயந்தி விழா கொண்டாடப்படுகிறது. பௌர்ணமி நாளில் இம் மகா மந்திரத்தை பதினாறு முறையேனும் ஜபித்தால் எல்லா பாக்கியங்களும் கிட்டும் என்பது சுகர் அருள் மொழி.

ஓம் ஐம் க்லீம் சௌ : சக்திதராய
ஓங் நங் மங் சிங் வங் யங் லம்போதராய
ஹரிம் ஹ்ரிம் ஸ்ரீம் சுப்ரமண்யாய
சரவனோத்பவாய ஹிரண்யோத்பவாய
க்லிம் சர்வ வச்யாய
தன ஆக்ருஷ்ய தம் பம் ஹம் ஜூம்
ஷம் ஸம் அதிர்ஷ்ட தேவதாய
ஷண்முகாய சர்வ தோஷ நிவாரணாய
சர்வ க்ரஹ தோஷ நிவாரணாய
சிவாய சிவ தனயாய இஷ்டார்த்த ப்ரதாயகாய
கம் கணபதயே க்லௌம் ஷம்
சரவண பவாய வசி வசி.

அதன் மூலம் நமக்கும் பாகவத புராணம் கிடைத்தது. அதன்படியே இன்றும் உபன்யாசகர்கள் "ஸப்தாஹம்" அதாவது ஏழு நாள்களில் பாக வதம் பிரவசனம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள் என்பர்.

ஸ்ரீநிவாசன், பத்மாவதி தெய்வீகத் திருமணத்தை முன்னின்று நடத்தியவர் சுகப்பிரம்ம ரிஷி. மேலும் குபேரனிடம் கல்யாணத்திற்காக கடன் வாங்க ஸ்ரீநிவாசனுக்கு ஜாமீன் கொடுத்தாராம். திருப்பதியில் இவர் வாசம் செய்ததாகக் கூறப்படுவதற்கு இணங்க, "திருச்சுகனூர்" என்று அழைக்கப்பட்ட இடமே தற்போது மருவி "திருச்சானூர்' ஆனதாகக் கூறப்படுகிறது.

தமிழகத்தில் சேலத்தில் உள்ள சிவன் கோயில் மூலவர் இவரால்வழிபடப்பட்டவர். அதனால் அந்த இறைவனின் திருநாமம் சுகவனேஸ்வரர் ஆனது.

இக்கோயிலில் சுகப்பிரம்ம ரிஷிக்கு தனி


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# திருநீறு




திருநீறு நான்கு முறையில் தயார் செய்யப்படுகிறது.

**கல்பம்:**

நோயின்றி ஆரோக்கியத்துடன், கன்று குட்டியுடன் உள்ள தூய பசுவின் சாணத்தை தாமரை இலைகளில் தாங்கி எடுத்து, அதனை பஞ்ச பிரம்ம மந்திரங்கள் ஒத அதனை அக்னியில் இட்டு எரிப்பதன் மூலம் கிடைப்பது ஆகும்.

**அனுகல்பம்:**

தோட்டம் காடுகளில் மேயும் பசுக்களின் சாணத்தை அக்னியில் எரிப்பதன் மூலம் கிடைப்பதாகும்.

**உப கல்பம்:**

பசுக்கள் தங்கியிருக்கும் இடம் மற்றும் தொழுவத்தில் எடுக்கப்பட்ட சாணத்தை அக்னியில் எரித்து, அதன் மூலமாகக் கிடைப்பதாகும்.

**அகல்பம்:**

பல பசுக்களின் சாணத்தை ஒன்றாக்கி முறையாக மந்திரங்கள் ஓதாமல் நெருப்பில் எரித்து கிடைப்பது ஆகும். ஐஸ்வரயம் எனப் போற்றப்படும் திருநீறை அணிவதற்கு முன் இந்த பதிகத்தை பக்தியுடன் பாடி அணிய வேண்டும்.

**மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு**
**தந்திரமாவது நீறு**
**சமயத்தில் உள்ளது நீறு**
**செந்துவர் வாயுமைப் பங்கன்**
**திரு ஆலவாயன் திருநீறே**

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

தெரியாத, புரியாத,
ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக தொகுத்து
பாமரர்களும் புரிந்து கொள்ளும்
வகையில் நமது இதழில்
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த

**140** க்கும் மேற்பட்ட

இதழ்களை

aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.




# கணபதி ஹோமமும் அதன் அற்புதமும்



கேரளாவில் சூர்ய காலடி என்று அழைக்கப்பட்ட நம்பூதிரி இல்லம் ஒன்று இருந்தது. வசதி மிக்கவரான இந்த நம்பூதிரிக்கு தென்னந்தோப்பு ஒன்று இருந்தது. மூத்தசெக்கன் என்னும் காவலாளியின் பொறுப்பில் அது இருந்து வந்தது.

அவனும் எஜமானர் மீது விசுவாசம் கொண்டவன். உண்மையே பேசுவான். மற்றவர் பொருளுக்கு ஆசைப்படமாட்டான். எஜமானரின் பொருளை தன் பொருளாக பாதுகாத்தான். மரத்தில் இருந்து முற்றிய நெற்றுக் காய்கள் காற்றில் அடித்து விழும். அந்த காய்கள் காவலாளிக்கு உரியதாகும்.

ஒருநாள் மார்கழி மாத இரவில் செக்கனுக்கு குளிர் தாங்க முடியவில்லை. தென்னை மட்டைகளை குவித்து தீ மூட்டினான். இரவு முழுவதும் கண்விழிக்கவே பசிக்க ஆரம்பித்தது.

நெற்றுக்காய் இரண்டை எடுத்து உரித்து, கொப்பரைகளை பிரித்தான். அதை தீயில் சுட்டு சாப்பிட்டான். தினமும் இரவு இதை வழக்கமாக்கினான்.

ஒரு நாள் தேங்காய் சாப்பிடும் போது பின்புறத்தில் இருந்து துதிக்கை நீண்டது. பயத்துடன் தேங்காய் துண்டுகளை துதிக்கையில் வைத்தான். தேங்காயை இழுத்துக்கொண்டு தும்பிக்கை மறைந்தது.

"யானை இல்லாமல் தும்பிக்கை மட்டும் எப்படி வரும்? தேங்காயை மட்டும் வாங்கி போனது எப்படி? யானை தோப்புக்குள் புகுந்தால் மரங்களுக்கு சேதம் ஏற்படுமே" என யோசித்தபடி இருந்தான். மறுநாள் காலையில் மீண்டும் தும்பிக்கை நீண்டது. தேங்காயை அதில் வைத்தபடி பார்த்தபோது அழகான யானை குட்டி ஒன்று தலை, காதுகளை அசைத்தபடி இருந்தது.

அவனையும் அறியாமல் அன்பு ஏற்படவே, கட்டித் தழுவினான். நாளும் இது தொடர் கதையானது. அதிகாலையில் வரும் யானைக்குட்டி தேங்காய்களை வாங்கி சாப்பிட்டு செல்ல ஆரம்பித்தது.

ஒருநாள் சூர்யகாலடி இல்லத்தின் நம்பூதிரி வெளியூர் சென்று ஊருக்கு திரும்ப நேரமாகி விட்டது. வீட்டுக்கு செல்ல தென்னந்தோப்பு வழியாக வந்தார். இருட்டுக்குள் சற்று தொலைவில் செக்கன் தேங்காய்களை சுடுவதையும், அவன் யாரிடமோ கொடுப்பதையும் கண்டார். மனதிற்குள்





மந்திரம் ஜபித்தபடி வந்த அவர், குட்டி யானை ஒன்று தேங்காய்களை வாங்கி சாப்பிடுவதைக் கண்டு அதிசயித்தார்.

"எனக்கு இந்த யானைக் குட்டியை கொடுப்பாயா?" எனக் கேட்டார். விசுவாசத்துடன்,"தாராளமாக அழைத்துச் செல்லுங்கள் சுவாமி" என்றான்.

நம்பூதிரியும் சந்தோஷத்துடன் நிறைய பொன், பொருள் அளித்ததோடு வீடு, நிலத்தையும் உரிமையாக்கி பத்திரம் எழுதி தருவதாக தெரிவித்தார். அங்கிருந்த நெருப்பு மூட்டும் தொட்டி, நெற்றுத் தேங்காய்களை கையில் எடுத்துக் கொண்டார்.

யானையை தடவிக் கொடுத்தபடி அழைத்துச் சென்றார். தேங்காய்களை சாப்பிடக் கொடுத்துக் கொண்டே நடந்தார். வழியில் யானை தன் தலையை அசைத்தபடி அதிசயப்படும்படி நம்பூதிரியுடன் பேசத் தொடங்கியது.

"நீ எனக்கு பிரியமானவன். அதே போல உன் காவலாளி செக்கனும் எனக்கு பிரியமானவன். அதிகாலை வேளையில் யார் எனக்கு மட்டையும், கொட்டாங்குச்சியும் கொண்டு ஹோமம் செய்வதோடு தேங்காய்களை ஹோமத்தில் ஆஹுதி அளிக்கிறார்களோ, அவர்களுக்கு ஐஸ்வர்யம் அளிப்பதாக சங்கல்பம் செய்திருக்கிறேன். இதை செக்கன் அறியாமலேயே தொடர்ந்து செய்து என் அருளுக்கு பாத்திரமாகி விட்டான். உன் மூலமாக அனைத்து ஐஸ்வர்யங்களை அடைவான். தென்னந்தோப்பு உன்னுடையது அல்லவா? உனக்கும் என்ன வரம் வேண்டுமோ கேள்" என்றது.

மந்திர சாஸ்திரத்தில் சிறந்த நம்பூதிரிக்கு யானை வடிவத்தில் இருப்பவர் விநாயகப்பெருமான் என்பது புரிந்தது. சாஷ்டாங்கமாக சுவாமியின் காலில் விழுந்து வணங்கினார். தன் இல்லத்தில் மந்திர பூர்வமாக ஹோமம் நடத்தினார்.

"இனி உன் இல்லத்தில் நிரந்தரமாக தங்கியிருப்பேன். எனதருள் என்றும் உனக்குண்டு. எல்லா நலங்களையும் பெற்று வாழ்வாய்" என வரம் அளித்தார்.

நம்பூதிரியும் அதன்பின் விநாயகர் சிலையை வீட்டில் பிரதிஷ்டை செய்து கணபதி ஹோமத்தை அடிக்கடி நடத்த தொடங்கினார்.

இன்றும் கேரளாவில் சூர்ய காலடி இல்லத்தில் விநாயகர் சதுர்த்தி, விசேஷ நாட்களில் யானையின் முன்னிலையில் ஹோமம் நடக்கிறது.

அதிகாலையில் கணபதி ஹோமம் நடத்தும் காரணம் இதுவே!

ஏனெனில் கணபதி காலம் என்றே அதிகாலைக்கு பெயர் உண்டு.

எளிய மனிதரான செக்கன் குளிருக்காக தீ மூட்டியதையே தனக்குரிய ஹோமம் நடப்பதாக கருதி காட்சியளித்து விநாயகர் அருள்புரிந்தார்.

அப்படியானால் முறையாக வேதங்கள் வகுத்த முறைப்படி கணபதி ஹோமம் செய்பவருக்கு விநாயகர் அருளை வாரி வழங்குவார் என்பதற்கு ஆதாரம் கேரளாவில் இன்றும் உள்ள இந்த இல்லம்.....



# எங்கள் சேவைக்கு உதவுங்கள்...

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்-ஆப்,
இ-புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

## இதுவரை 140 இதழ்களை கடந்துள்ளோம்.

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



**ஆன்மிகமலர் டிரஸ்ட்**

Tamilnadu Government Redg.304/2016


**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்




# 2022 ஆவணி மாத பலன்கள்

## மேஷம்



தொழில்பார்வையில் சாதாரணமாக இருக்கும். வேலைக்காக கடுமையாக உழைப்பதை காணலாம். குரு உங்கள் பன்னிரண்டாவது வீட்டில் பிற்போக்குநிலையில் இருப்பார், இதன் காரணமாக நீங்கள் கல்வித் துறையில் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். மாதத்தின் தொடக்கத்தில், புதன் கிரகம், புத்திசாலித்தனம் மற்றும் தகவல்தொடர்பு காரணியாகும், ஆரோக் கியத்தைப் பொறுத்தவரை, கலவையான முடிவு களை அளிக்கும் மாதமாக நிரூபிக்க முடியும்.

## ரிஷபம்



தொழில் பார்வையில் சாதகமாக இருக்கும் உங்களுக்குஅதிர்ஷ் டத்தின் முழு ஆதரவு கிடைக் கும். இந்த மாதத்தில், ரிஷப ராசி ஜாதகக்காரர்களுக்கு புதிய வணிக வழிகள் திறக்கப்படலாம். மேலும், வியா பாரத்தில் தந்தையின் ஆதரவைப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. தொழில்நுட்பக் கல்வியைத் தொடரும் அல்லது வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடருபவர்களுக்கு சாதகமாக இருக்கும். குடும்ப வாழ்க்கையின் உங்கள் துணையுடன் சிறந்த உறவைப் பெறுவதில் வெற்றி பெறலாம்.

## மிதுனம்



தொழில் ரீதியாக நேர்மறை யான முடிவுகளை அளிக்கும். உங்கள் பத்தாவது வீட்டின் அதிபதியானகுரு வக்ர நிலையில் இருப்பார் மற்றும் இந்த காலகட்டத்தில் அதன் சொந்த ராசியில் இருப் பார், இதன் காரணமாக இந்த காலகட்டத்தில் உங்கள் கடின உழைப்பின் முழு முடிவுகளை நீங்கள் பெறலாம், வியாபாரத்தில் சாதகமான முடிவுகள் கிடைக்கும். உங்கள் இரண்டாவது வீட்டில் சூரியன் மற்றும் சுக்கிரன் அமர்ந்திருப்பதால், இந்தக் காலத்தில் உங்கள் வருமானமும் அதி கரிக்கும். திருமணமானவர்களுக்கு சாதகமாக இருக்கும்.

## கடகம்

சூரியன் மற்றும் புதனின் இந்த இணைவு



வேலையில்லாத மற்றும் புதிய வேலை தேடும் கடக ராசிக்காரர்களுக்கு நன்மை பயக்கும். இந்த நேரத்தில், புலத்தில் தெரியாத சிலரின் ஆதரவை நீங்கள் பெறலாம், குடும்ப வாழ்க்கையைப் பொறுத்த வரை, சாதாரணமாக இருக்கும். இந்த மாதம், சூரியன், உங்கள் இரண்டாவது வீட்டின் அதிபதி, அதாவது குடும்ப வீடு, உங்கள் இரண்டாவது வீட்டில் இடம் பெயரும், இதன் காரணமாக உங்கள் குடும்ப உறுப்பினர்களிடையே அன்பும் நல்லிணக்கமும் அதிகரிக்கும்.

## சிம்மம்



சாதகமான முடிவுகள் கிடைக்க வாய்ப்புள்ளது. இந்த நேரத்தில் உங்கள்நிறுத்தப்பட்டவேலையை தானாகவே மீண்டும் தொடங்கலாம், அது உங்களுக்கு பயனளிக்கும். இது தவிர, வெளிநாடுகளில்வியாபாரம் செய்பவர்கள் அல்லது வெளிநாடு தொடர்பான வியாபாரம் செய்பவர்களும் இந்த காலத்தில் சாதகமான முடிவுகளைப் பெற வாய்ப்புள்ளது. குடும்ப வாழ்க்கையின் கண்ணோட்டத்தில் பார்த்தால், இந்த மாதம் உங்களுக்கு நன்றாக இருக்கும். வெளிநாட்டு வர்த்தகத்தில் இருந்து நிதி நன்மைகளைப் பெறுவதில் வெற்றிகரமாக முடியும்.

## கன்னி

கல்வித் துறையில் சிறப்பாக செயல்படுவதைக் காணலாம். குடும்ப வாழ்க்கையைப் பொறுத்தவரை



சராசரியாக இருக்கும். கேது உங்கள் இரண்டாவதுவீட்டில் அதாவது குடும்ப வீட்டில் அமையும், இதன் காரணமாக குடும்பத்தில் ஒருவித பிரச்சனை ஏற்பட வாய்ப்பு உள்ளது. நிதி ரீதியாகநல்லதாக இருக்கும். உங்கள் வருமானம் அதிகரிக்கும். ஆரோக்கியம் ஏற்ற தாழ்வுகள் நிறைந்ததாக இருக்கலாம். இந்த காலகட்டத்தில் உங்கள் நாள்பட்ட நோய்கள் உங்களை தொந்தரவு செய்யலாம்.

## துலாம்

ஏற்ற இறக்கங்கள் நிறைந்ததாக இருக்கும், உங்கள் இயல்பில் தூண்டுதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தொழில் பார்வையில், கலவையான முடிவுகளை அளிக்கும். களத்தில் சிரமங் களை எதிர்கொள்ள நேரிடும். கல்வியில் சாதகமானதாக இருக்கும்.



கல்வித் துறையில் பல நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். குடும்ப வாழ்கை பொறுத்த வரை கலவையான பலன் பெற வைப்புள்ளது. துணையுடன் உங்களுக்கு சர்ச்சை ஏற்பட வாய்ப்புள்ளது. பொருளாதார கண்ணோட்டத்தில் பலன் கிடைக்கும். உடல்நலம் தொடர்பான பிரச்சனைகள் தொந்தரவு செய்யும்.

## விருச்சிகம்


ஒவ்வொரு துறையிலும் நேர்மறையான முடிவுகளை அளிக்கும். தொழில்ரீதியாக,



மிகவும் நன்றாகஇருக்கும். வெளிநாட்டு நிறுவனத்தில் வேலைவாய்ப்பு கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. படிப்பில் ஆர்வம் ஏற்படும். குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியும் அமைதியும் கிடைக்கும். ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை சற்று தொந்தரவாக இருக்கும். கேது உங்கள் ஆறாவது வீட்டிலும் முழு பார்வை பெறுவார். கிரகங்களின் இந்த நிலை காரணமாக, விருச்சிக ராசி ஜாதகக்காரர் மன உளைச்சலுக்கு ஆளாகலாம்.

## தனுசு

தொழில் சாதகமாக இருக்கும். இந்த மாதம்



நீங்கள் தொழில் துறையில் அதிர்ஷ்டத்தைப் பெற முடியும். கல்வியின் பார்வையில்,சற்று கடினமாக இருக்கும். நீங்கள் சில பிரச்சனைகளை சந்திக்க வேண்டியிருக்கும். குடும்ப வாழ்க்கையின் அடிப்படையில் ஒரு கலவையான மாதமாக இருக்கும். இந்த மாதம், உங்கள் இரண்டாவது வீட்டில், அதாவது குடும்ப வீட்டில், சனி பகவான் வக்ர நிலையில் அமர்ந்திருப்பார் மற்றும் சந்திரன் இணைவதன் மூலம், குடும்பத்தில் சர்ச்சை ஏற்பட வாய்ப்பு உள்ளது. இரத்தம் தொடர்பான பிரச்சனைகளால் இந்த மாதமும் நீங்கள் சிரமப்படலாம்.

## மகரம்

தொழிலில் சில பிரச்சனைகளை சந்திக்க வேண்டியிருக்கும். கல்வியின் பார்வையில், மகர



ராசி ஜாதகரர்களுக்கு ஆகஸ்ட் மாதம் நல்லதாக இருக்கும். கல்வித் துறையில் நல்ல முடிவுகளைப் பெற முடியும். சகோதரர்களின் முழு ஆதரவையும் பெறலாம். திருமண வாழ்க்கையில் சில பிரச்சனைகள் இருக்கலாம். நிதி வாழ்க்கையைப் பொறுத்தவரை, சாதகமாக இருக்கும். ஆரோக்கியத்தின் பார்வையில், நன்றாக இருக்கும்.உங்கள் எட்டாவது வீட்டில், அதாவது வயது மற்றும் சிம்மத்தில் இருக்கப் போகிறது, இதன் காரணமாக மகர ராசிக்காரர்களின் எதிரிகள் தோற்கடிக்க முடியும்.

## கும்பம்

நேர்மறையாக இருக்க வாய்ப்புள்ளது. உங்கள் மூன்றாவது வீட்டில், அதாவது வலிமையான வீட்டில் ராகுவுடன் தங்குவதன் மூலம் அங்காரக யோகம் அமையும், இதன் காரணமாக நீங்கள் பிரச்சனைகளை சந்திக்க வேண்டியிருக்கும்.



கல்வியின் பார்வையில், கும்ப ராசிக்காரர்களுக்கு சாதகமாக இருக்கும். குடும்ப வாழ்க்கை நன்றாக இருக்கும். குடும்ப வீட்டின் அதிபதியான குரு அதன் சொந்த ராசியில் அமைந்திருக்கும், இதன் காரணமாக குடும்பத்தில் நடக்கும் சச்சரவு தீர்க்கப்படும். உங்கள் எதிரிகள் தங்கள் திட்டங்களில் தோல்வியடையக்கூடும்.

## மீனம்

கர்ம வீட்டின் அதிபதியான குரு உங்கள் முதல் உயர்வு வீட்டில் அமைந்திருக்கும், இது உங்கள் தொழிலை வலுப்படுத்தும். இது தவிர, ஒரு புதிய தொழிலைத் தொடங்க திட்டமிட்டால், இந்த காலம் அவர்களுக்கு சாதகமாக இருக்கும்.



கல்வியின் பார்வையில், ஆகஸ்ட் மாதம் கலவையான முடிவுகளைத் தரலாம். கல்வித் துறையில் பிரச்சினைகள் ஏற்படலாம். பொருளாதாரக் கண்ணோட்டத்தில் ஒரு கலப்பு மாதமாக இருக்கும். உங்கள் செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இந்த காலத்தில் உடல்நலப் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்.

# ஆலிலையும் கிருஷ்ணரும்



எத்தனை விதமான இலைகள் இருந்தும் கிருஷ்ணர் ஆலிலையில் படுத்திருப்பதற்கு ஒரு காரணம் உண்டு.

தாவர வகைகளிலேயே மிகவும் உயர்ந்த இடத்தை பெறுவது ஆலமரம்.

ஆலிலைக்கு ஒரு விசேஷ சக்தி உண்டு.

இது வாடினாலும் கூட நொறுங்கி போவதில்லை.

சருகானாலும் கூட மெத்தை மாதிரி இருக்கும்.

ஓரளவு காய்ந்த ஆலிலையின் மேல் தண்ணீர் தெளித்தால், அது இழந்த பச்சை நிறத்தை பெறும் சக்தி வாய்ந்தது.

கண்ணன் பிறப்பு இறப்பு இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட ஆத்மா என்பதை இதன் மூலம் நிரூபிக்கின்றார்.

வாழ்க்கை என்ற சம்சாரக்கடலில் அனுபவிக்கும் இன்ப, துன்பங்களை ஒரு விளையாட்டாக எடுத்துக் கொண்டு என்னைப் போல் ஆனந்தமாய் இருக்க வேண்டும் என்று கிருஷ்ணர் அழகாக கூறுகிறார்.

மனிதருக்கு ஒரு தத்துவத்தை அளிக்க வேண்டும் என்பதற்காகவே கண்ணன் ஆலிலையில் படுத் திருக்கிறார்.



# தினம் இரண்டு கிராம்பு சாப்பிட்டால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்

இரவில் கிராம்பை உட்கொள்வது இருமல், சளி, வைரஸ் தொற்று, மூச்சுக்குழாய் அழற்சி, சைனஸ் மற்றும் ஆஸ்துமா போன்றவற்றிலிருந்து விடுபட கிராம்பு உதவும்.

உடலில் இயற்கையான நோய் எதிர்ப்புசக்தியை அதிகரிக்க வீட்டிலேயே கிடைக்கும் பல இயற்கை மூலிகை பொருட்களை எடுத்துக்கொள்வது அவசியம். அந்த வகையில் கிராம்பு உங்கள் உடலில் இம்முனிட்டியை அதி கரிக்க பயன்படு கிறது. அனைத்து இந்திய சமய லறைகளிலும் கிராம்பு என்பது பொதுவாக பயன்படுத்தப்படும் ஒரு வகை இந்திய மசாலா பொருள் ஆகும்.

இது ஒரு உணவின் சுவையை மேம்படுத்துவ தோடுமட்டுமல்லாமல் அதன் ஊட்டச்சத்து மதிப்பை யும் அதிகரிக்கிறது. விஞ்ஞான ரீதியாக கிராம்பு சைஜீஜியம் அமோடிகம் என அழைக்கப்படுகிறது. இதுதவிர கிராம்பு ஆயுர்வேதத்தில் அவற்றின் மருத்துவ பண்புகளுக்காக பல ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கிராம்பினை தவறாமல் பயன்படுத்தும் போது, அவை வயிற்று வியாதிகளிலிருந்தும் பல் மற்றும் தொண்டை வலியிலிருந்தும் நிவாரணம் அளிக்க உதவும்.

கிராம்பில் உள்ள யூஜெனோல் என்ற பொருள் தான் மன அழுத்தம் மற்றும் பொதுவான வயிற்று நோய்களைப் போக்க உதவுகிறது. இதுதவிர இந்த சிறிய மசாலா பொருள் பார்கின்சன் நோயைத் தடுக்க உதவும் என்பதை அறிந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டை அதி கரிக்கும் டோபமைன் (ஞிஷீஜீணீனீவீஸீமீ) ஹார்மோன் சுரப்பு குறைவதால் ஏற்படும் பாதிப்பு தான் பார்கின்சன். நரம்பு மண்டலத்தின் மிக முக்கியமான பாதிப்பான இது, தசை இயக்கத்தை பாதிக்கக்கூடியது. மூட்டுகள், தலை மற்றும் கழுத்துப் பகுதிகளில் உள்ள தசைகளின் செயல்பாடுகள் முற்றிலுமாக குறைந்துவிடும்.

பொதுவாக இந்த நோய் வயதானர்களிடையே காணப்படும். அதுவே நீங்கள் அன்றாடம் கிராம்பு எடுத்துக்கொண்டால் இந்த பாதிப்பில் இருந்து விடுபடலாம். கிராம்பில், வைட்டமின்



ஈ, வைட்டமின் சி, ஃபோலேட், ரிபோஃப் ளேவின், வைட்டமின் ஏ, தியாமின், வைட்டமின் டி, ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் மற்றும் பிற அழற்சி எதிர்ப்பு மற்றும் பாக்டீரியா எதிர்ப்பு பண்புகள் நிறைந்துள்ளன. இந்த மருத்துவக்குணம் கொண்ட மூலிகையை உணவில் சேர்க்க பல்வேறு வழிகள் உள்ளன. ஆனால் இந்த ஒரு வழிமுறையை கடைப்பித்தால் கிடைக்கும் ஆரோக்கிய நன்மைகளோ ஏராளம். அவை என்ன என்பதை பற்றி விரிவாக பாப்போம்.

**கிராம்புகளை உட்கொள்வதற்கான சிறந்த வழிமுறைகள்:**

இரவு படுக்கைக்குச் செல்வதற்கு முன் இரண்டு கிராம்புகளை மென்று சாப்பிட்டு பின்னர் ஒரு கிளாஸ் வெதுவெதுப்பான நீரைக் குடித்து வந்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதோடு பின்வரும் சிக்கல்களிலிருந்தும் விடுபடலாம்.

1. இரவில் கிராம்பை உட்கொள்வது மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு, அமிலத்தன்மை போன்ற வயிற்றுப் பிரச்சினைகளை போக்க உதவும். இது உங்கள் செரிமானத்தையும் மேம்படுத்துகிறது.
2. கிராம்பில் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் இருப்பது மட்டுமல்லாமல் இவை பாக்டீரியா எதிர்ப்பு பண்புகளையும் கொண்டுள்ளன. மேலும், இதில் முகப்பருவைத் தடுக்க உதவும் ஒரு வகை சாலிசிலேட் உள்ளது.
3. கிராம்புகளை வெதுவெதுப்பான நீரில் உட்கொள்வதன் மூலம் பல்வலியை தவிர்க்கலாம். அல்லது பல் வலியிருக்கும் இடத்தில் ஒரு கிராம்பை வைக்கலாம். இது வலி நிவாரணியாகவும் செயல்படும்.
4. தொண்டை புண் மற்றும் தொண்டை வலியைப் போக்க கிராம்பு உதவும்.
5. கை, கால்கள் நடுங்கும் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள் படுக்கைக்கு செல்லும் முன் 1 முதல் 2 கிராம்புகளை உட்கொள்ளவதன் மூலம் பிரச்சினையிலிருந்து நிவாரணம் பெறலாம்.
6. தினமும் கிராம்பை உட்கொள்வது உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.
7. இருமல், சளி, வைரஸ் தொற்று, மூச்சுக்குழாய் அழற்சி, சைனஸ் மற்றும் ஆஸ்துமா போன்றவற்றிலிருந்து விடுபட கிராம்பு உதவும்.


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# மனிதர்களைத் துரத்தும் துன்பமும் சீதை சொன்ன நீதியும்

நமக்கு ஒருவர் துன்பம் விளைவிக்கும்போது, நாம் அவர்களிடம் கோபம் கொள்கிறோம். பழிக்குப் பழி வாங்கத் துடிக்கிறோம். ஆனால், அது தவறான செயல். நமக்கு ஒரு துன்பம் ஏற்படுகிறது என்றால், அதற்குக் காரணம், நாம் முன் செய்த வினைப்பயன்தான்.

எனவே, நமக்கு ஒருவர் துன்பம் விளைவிக்கும்போது, நாம் அவரிடம் கோபம் கொள்ளாமலும் பழிக்குப் பழி வாங்க நினைக்காமலும் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

அசோகவனத்தில் சீதை இருந்தபோது, அவளை அரக்கியர்கள் பலர் துன்பப்படுத்தினர். அதற்காக சீதை அவர்களிடம் கோபம் கொள்ளவில்லை. மிகுந்த பொறுமையுடன் சகித்துக்கொண்டாள்.

தனக்கு நேரிடும் துன்பங்கள் எல்லாம், தன் வினைப்பயன் காரணமாகவே ஏற்படுகின்றன என்று உறுதியாக நம்பினாள்.

ராவண சம்ஹாரம் முடிந்த பிறகு, அசோகவனத்தில் இருந்த சீதாபிராட்டியாரிடம்





விவரம் சொல்ல வந்த அனுமன், பிராட்டியை வணங்கி, ''தாயே, ஸ்ரீராமபிரான் வெற்றி வாகை சூடிவிட்டார். ராவணன் மாண்டான்'' என்று கூறினார்.

அனுமன் கூறியதைக் கேட்டு மகிழ்ந்த சீதை, "அனுமனே, நான் முன்பொரு முறை உயிர் துறக்க நினைத்த நேரத்தில், நீ வந்து எனக்கு ஆறுதல் கூறி காப்பாற்றினாய். இப்போதும் ராமபிரான் பெற்ற வெற்றிச் செய்தியை நீயே வந்து எனக்குத் தெரிவித்தாய். ஏற்கெனவே உனக்கு நான் சிரஞ்சீவியாக இருக்கும் வரத்தைத் தந்துவிட்டேன். முன்பை விடவும் அதிகம் சந்தோஷம் தரும் செய்தியை இப்போது கொண்டு வந்திருக்கிறாய். உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்'' என்றார்.

அதற்கு அனுமன், ''தாயே, எனக்கு ஒரு வரமும் வேண்டியதில்லை. நான் விரும்புவது ஒன்றே தான். கடந்த பல மாதங்களாக உங்களைப் பாடாகப் படுத்திய இந்த அரக்கிகளை, நான் தீயில் இட்டுக் கொளுத்தவேண்டும். அதற்கு தாங்கள் அனுமதிக்கவேண்டும்'' என்று அனுமன் கேட்டுக்கொண்டார்.

ஆனால், அனுமனின் கோரிக்கையில் சீதைக்கு உடன்பாடு இல்லை. எனவே அனுமனைப் பார்த்து, ''அனுமனே, நீ நினைப்பதுபோல் இந்த அரக்கியர் என்னைத் துன்புறுத்தி இருந்தாலும், அதற்காக இவர்களை தண்டிப்பதில் எனக்கு சம்மதம் இல்லை. நான் இப்படி துன்பம் அனுபவிப்பதற்குக் காரணம், நான் முன்பு செய்த செயலின் விளைவுதான்.

பொன்மானாக வந்த மாயமானுக்கு ஆசைப்பட்டு, அதைப் பிடித்து வர என் கணவரை அனுப்பியதும், சென்ற கணவர் நீண்ட நேரமாகியும் திரும்பி வராமலும், 'லட்சுமணா, லட்சுமணா' என்று அபயக் குரல் எழுப்பியதாலும், பயந்து போன நான், எனக்குக் காவலாக இருந்த லட்சுமணனை அனுப்பிப் பார்க்கச் சொன்னேன்.

அவர் என் கணவருக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டிருக்காது என்று மறுத்துக் கூறியும், நான் ஏற்றுக்கொள்ளாமல் சுடுசொற்களால் லட்சுமணனைக் கண்டித்துப் பேசினேன்.

ஒரு பாவமும் அறியாமல், இரவும் பகலுமாக எங்களைக் கண்ணிமைபோல் காவல் காத்த லட்சுமணனின் மனம் நோகும்படி நான் பேசியதுதான், இங்கே நான் அனுபவித்த துன்பத்துக்குக் காரணம்.

எனவே, நீ அரக்கியர்களை ஒன்றும் செய்துவிடாதே. அவர்கள் அரக்கியர்கள் என்றாலும் பெண்கள். அவர்களுக்குத் தீங்கு செய்து நீ பெரும் பாவத்தைத் தேடிக்கொள்ளாதே'' என்று கூறினார். அனுமன் உண்மையைப் புரிந்துகொண்டார்.

நமக்கு மற்றவர்கள் துன்பம் விளைவிக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் நாம் முன் செய்த தீவினைப் பயன்தான் காரணம்.

இதைத்தான் மகாபாரதத்தில் வரும் ஆணிமாண்டவ்யரின் வாழ்க்கையும் நமக்கு உணர்த்துகிறது. சிறுவயதில் அவர் தும்பியின் வாலில் கூரிய முனை கொண்ட தர்ப்பைப் புல்லைச் செருகியதால், பிற்காலத்தில் மன்னன் ஒருவனால் கழுவில் ஏற்றப்பட்டார்.

மகரிஷியான தனக்கு ஏன் இப்படி ஒரு துன்பம் ஏற்பட்டது என்று #ஆணிமாண்டவ்யர் தர்மதேவதையிடம் கேட்டபோது, சிறுவயதில் அவர் தும்பியைத் துன்புறுத்தியதுதான் காரணம் என்று கூறியது.

இதைத்தான் வள்ளுவப் பெருந்தகை, 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் பிற்பகல் தமக்கின்னா தாமே வரும்' என்று நமக்கு அறி வுறுத்தி இருக்கிறார்.

# 140 இதழ்களை கடந்துள்ளோம்

## ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக மூன்றுவித சேவைகளை செய்து வருகிறோம்

1.ஆன்மிகமலர்.காம்
2.ஆன்மிகமலர் Mobile app
3. ஆன்மிகமலர் இ-மேகசின்

## எங்களது அடுத்த சேவையாக

**ஆன்மிகமலர் பப்ளிகேஷன் வாயிலாக**

திருக்குறள், சிவபுராணம், கந்தசஷ்டி கவசம்
ஆன்மிக எழுத்தாளர்களின் ஆன்மிக தொகுப்பு,
ஆன்மிக துணுக்குகள், மகான்களின் சரித்திரம்,
அறிவுரைகள், பழமொழிகளின் தொகுப்பு,
போன்றவற்றை இ-பப்ளிகேஷன் முறையில்
வண்ணமயமான இ-புத்தகங்களாக தயாரிக்கவிருக்கிறோம்.

இந்த புத்தகத்திற்கு sponsor செய்ய விரும்புபவர்களை சிறப்பிக்க, அவர்களின் குடும்ப விசேஷங்கள், திருமணம், பிறந்த நாள், கிரகபிரவேசம் போன்ற சுப நிகழ்வின் நினைவாக அல்லது அவர்களது தொழில் சம்பந்தப்பட்ட விளம்பரங்களை வெளியிடுவதற்காக இந்த புத்தகத்தில் ஒரு பக்கம் ஒதுக்கித்தரப்படும். இதன்மூலம் எங்கள் சேவையில் நீங்களும் பங்கேற்று இறை சிந்தனையை பரப்பலாம்.

sponsor செய்ய விரும்புபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்:
சி.வி.நடராஜன் 9444228203

# பகைவர்களையே பாதுகாக்கும் இறைவன் பக்தனை விட்டுவிடுவானா?

கடவுள் உருவாக்கிய மதம்

திருமாலிடம் சாதாரண ஜீவர்களாகியநாம் எப்படியெல்லாம் உறவு பாராட்டலாம் என்பதை சிறிது சிந்திப்போம் ஸ்ரீ வைஷ்ணவத்தில் தென்கலை பிரிவை சார்ந்த பிள்ளை லோகாச்சாரியார் என்ற மாபெரும் ஞானபுருஷன், தாம் எழுதிய நவ வித சம்பந்தம் என்ற புகழ்பெற்ற நூலில் பகவானுக்கும் பக்தனுக்கும் உடைய ஒன்பது விதமான உறவுகளை மிக எளிமையான முறையில் பட்டிய லோடு தருகிறார்.

அதில் முதல் உறவாக கூறப்படுகின்ற பித்ரு புத்ர சம்பந்த உறவில் அதாவது தந்தை மகன் உறவில் உள்ள சிறப்புகளைமிகவும் சிலாகித்து பேசிகிறார். உலகத்தை படைத்த பரம்பொருளை தந்தையாகவும், படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்தையும், புத்திரனாகவும் அனுபவித்து பாடப்படும் பாடல்கள் பலவற்றை ஆழ்வார்களின் பாசுரங்களில் காணலாம்.

மனிதனாகிய நமக்கு ஆயிரம் உறவுகள் இருக்கலாம். அத்தனை உறவுகள் இடத்திலும் உரிமை என்பது இருக்குமா என்றால் இருக்காது. ஆனால் தகப்பனிடம் உள்ள உரிமை தனித்தன்மையானது இன்னும் ஒரு படி சொல்லப்போனால் தகப்பனிடம் மட்டும்தான் நமக்கு உரிமையிருக்கிறது.

யாரிடம் கையேந்தினாலும் கௌரவம் குறையும், யாரிடம் உதை வாங்கினாலும் அவமானம் ஏற்படும். ஆனால் தந்தையிடம் கையேந்தினால் அது கௌரவக் குறைச்சல் அல்ல. கௌரவச் சின்னம்மாகும்.

என்னைப் பெற்றவன் நீ இந்த பூமியில் வந்து விழுவதற்கு எப்படி நீ காரணமோ



அப்படியே நீ நான் எழுந்து நடப்பதற்கும் காரணமாக இருக்க வேண்டும்.நான் சுகமாய் வாழ வளர நீ தான் எல்லாம் செய்ய வேண்டும் என்று தகப்பனைத் தவிர வேறு யாரிடம் உரிமையோடு கேட்கமுடியும்? கடவுள் ஞானத்தைதருபவன் செல்வத்தை தருபவன் சௌந்தர்யத்தை தருபவன் தைரியத்தை தருபவன் எவனோ அவன் தந்தையாகிறான். அதனால்தான் பிள்ளை யோகாச்சாரியார் ஒன்பது உறவுகளில் தந்தை உறவை முதன்மை படுத்துகிறார்.




மும்மூர்த்திகளில் பிரம்மன் படைப்பவன், பரமசிவனோ சம்ஹாரமூர்த்தி, திருமால்தான் உலகத்தை காக்கும் கடவுள். அதனால் திருமால் லோக ரட்சகனாகிறான்.

அவன் மீது பக்திகொள்ளாவிட்டாலும் அவனையே பரமவிரோதியாக எதிர்த்து நின்றாலும் தாக்க வேண்டியது அல்ல காக்க வேண்டியதை அவனது கடமையாகிறது.

பகைவர்களையே பாதுகாக்கும் பகவான் தன்னையே நினைத்து அல்லும் பகலும் உருகுகின்ற பக்தனை கைநழுவ விடுவானா? ஆற்றல் பொருந்திய ஒரு மன்னனின் ஆட்சியில் மக்கள் அனைவரும் பயமின்றி சுதந்திரமாக சந்தோஷமாக இருப்பது போல் பல கோடி மன்னர்களுக்கு இணையான பரந்தாமன் அரவணைப்பில் பாமரன் கூட பசும் தளிர் போல் செழித்து வளர்வான். ஆகவே பக்தன் தன்னை காக்கும். சக்தியாக கடவுளை கருதுவதை ரட்சிக்க ரட்ச்சிக்க சம்பந்தம் அதாவது காப்பவன் காக்கப்படுபவன் உறவு என்று ஸ்ரீ வைஷ்ணவம் இரண்டாவது உறவை சிறப்பிக்கிறது.

ஒருவனை முதளாளியாகவும், இன்னொருவனை தொழிலாளியாகவும் பார்ப்பது, பாவிப்பது, சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளுக்கு வழி வகுக்கும் என்று பொருள் முதல்வாதிகள் கூறுகிறார்கள்.ஆனால் ஆன்மீக உலகில் ஆண்டான் அடிமை என்பது ஆதிக்கம் செலுத்துகின்ற விஷயமாக கருதப்படுவது இல்லை. ஒரு உயிரின் பந்த பாசத்தழை அறுந்து போவதற்கும் உயிரானது தனது வாழ்க்கை பயணத்தில் முக்தியை நோக்கி நடைபோடுவதற்கு கிரியா உக்கியாகவும் பயன்படுகிறது என்று நம்பப்படுகிறது.

உலகம் முழுவதும் உள்ள உயிர்கள் அனைத்திற்கும் சொந்தக்காரனாக, உரிமையாளனாக இறைவன் கருதப்படுகிறான். இதனை கருத்தில் வைத்தே அவனை எஜமானன், ஆண்டான், ஆண்டவன் என்று அழைக்கிறோம். அத்தகைய இறைவனால் முறைப்படி ஆளப்படுகின்ற உயிர்களை அடிமையென்றும் கருதுகிறோம். எனது உடல், எனது உடமை அனைத்துமே எனது தகப்பனார் எனக்கு தந்தது எனும்போது



அவருக்கு நான் அடிமையாக இருப்பது அவமானமல்ல உடலைத் தந்த தகப்பனுக்கே நாம் அடிமை எனும்போது உலகத்தை தந்த இறை வனுக்கு அடிமையாக இருப்பது தனிச்சிறப்பு தானே



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

மூலப்பரம் பொருளான இறை வனை எஜமானன் என்று நம்பும் போது நமக்கு இன்னொரு வகை யான விடுதலையும் கிடைக்கிறது. பகவத்கீதையில் நிஷ்காமய கர்மம் அதாவது பலனை விரும்பாத செயல் என்று ஒன்று பேசப்படுகிறது. அதனடிப்படையில் பார்க்கும் போது எந்தவொரு செயலையும் பயனை நோக்கி செய்கின்ற போது செயலின் முடிவு நம்மை துக்கத்திற்கோ சந்தோஷத்திற்கோ ஆட்படுத்தி விடுகிறது. அதாவது தம்மை அறியாமலே அந்த செயலுக்கு நாம் கர்த்தவாகி விடுகிறோம். அப்போதே அகங்கார உணர்வு நம்மை விலங்கு போட்டு பூட்டி விடுகிறது.

அதே நேரம் இந்த காரியம் கடவுளுக்கானது இதன் பயன்கள் எனக்கானது அல்ல இதனால் ஏற்படும் லாப நஷ்டங்கள் முழுமையும் கடவுளைச் சார்ந்ததே எதுவும் என்னைச் சார்ந்தது அல்ல என்ற நம்பிக்கையோடு நான் செயல்பட்டேன் என்றால் கீதை சொல்லும் நிஷ்காமியகர்மத்தை கடைபிடித்தவனாகவும் ஆகிவிடு வேன்.

அதனால் சேஷ சம்பந்தம்என்ற ஆண்டான் அடிமை உறவை கடவு ளோடு கொள்ளும் உறவுமுறையில் மூன்றாவது நிலையாக ஸ்ரீ வைஷ்ண வம் கூறுகிறது. இந்த சேஷ சேஷிசம் பந்தத்தை எவனொருவன்செய்கிறானோ அவனது காரியங்கள் அனைத்துமே பகவத் கைங்கரியாமாக ஆகி விடுவதை அனுபவத்தில் உணரலாம்.

பிரபஞ்ச தண்டவாளத்தில் உலகம் என்ற ரயில் வண்டி இன்று வரை நிற்காமல் ஓடிக்கொண்டு இருப்பதற்கு மூலமான காரணமே உலக ஜீவன்கள் அனைத்தும் ஆண் பெண்ணாக இருப்பதுதான். ஆண் பெண் உறவில் சிரேஷ்டமானது கணவன் மனைவி உறவாகும். ஊமையாக பிறக்கும் குழந்தையை தாயும் தகப்பனும் புறக்கணிக்காமல் பாதுகாப்பது ரத்தப்பாசம்.

ஆனால் கணவனோ மனைவி யோ உருகுலைந்து போனாலும் உருப்பறுந்து போனாலும் ஒருவருக் கொருவர் கைவிடாமல் பாதுகக்க கடைசிவரை போராடுவது. எந்த பாசத்தின் அடிப்படையில்?

கண்ணுக்கே தெரியாத வார்த்தை களால் விவரிக்க முடியாத ஏதோ ஒரு சூட்சம பந்தம் இருவரையும் கட்டிபோடுகிறது. அந்த கட்டை அந்த பாசத்தை அழிந்து போகும் மனித சரிரங்களின் மீது காட்டாமல் சாஸ்வதமான இறைவனின் மீது திருப்புவதே பர்த்தா பாரியா சம்பந்தம் என்ற கணவன் மனைவி உறவு என்ற பக்தி பாதையாகும். நாயகன் நாயகி பாவம் என்னும் மதுர பக்தியும் இந்த வகையை சார்ந்ததுதான்.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434







மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர்
மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்



# யானையை வழிபட்ட பழங்காலப்பெண்கள்

பழங்காலத்தில் பெண்கள் சதுர்த்தி அன்று விநாயகப் பெருமானை கஜ பூஜை செய்து வழிபடுவார்கள். ஒரு நிஜமான யானை வரவழைக்கப்பட்டு முறைப்படி வழிபாடு செய்து, சிறந்த பலகாரங்களை யானைகளுக்கு அளிப்பார்கள்.

ஹஸ்தினாபுரியில் பாண்டவர்களும் கௌரவர்களும் ஒன்றாகத் தங்கியிருக்க விநாயகர் சதுர்த்தி நெருங்கியது.

விநாயக சதுர்த்தி அன்று குந்தி தேவி விநாயகப் பெருமானை வழிபடுவது வழக்கம், குந்தி மற்றும் காந்தாரி இருவரும் தங்கள் மகன்களிடம் கஜ பூஜைக்கு யானைகளை அழைத்து வரச் சொன்னார்கள்.

மகன்கள் தங்கள் தாய்மார்கள் வழிபாட்டிற்கு சிறந்த யானையை அழைத்துவர தீர்மானித்தனர்.

கௌரவர்களே சிறந்த யானையை முதலில் கண்டறிந்தனர் மற்றும் பாண்டவர்கள் கண்டு பிடித்தது சாதாரணமானது.

குந்திதேவி ஏமாற்றமடைந்தாள்.

அர்ஜுனன் அவளை இந்திரனின் யானையான ஐராவதத்தைப் பெறுவதாகக் கூறி ஆறுதல் கூறினான்.

இந்திரனுக்கு செய்தி அனுப்பினான். இந்திரன் உடனடியாக கடமைப்பட்டான், ஆனால் ஐராவதம் கீழே வருவதற்கு வானத்திலிருந்து பூமிக்கு ஒரு ஏணியை யார் வழங்குவார்கள்?

இதற்குள் ஐராவதம் மேகங்களுக்கு இடையே எட்டிப்பார்க்க ஆரம்பித்தது.

அர்ஜுனன் அம்புகளால் ஏணியை உருவாக்கத் தொடங்கினான்.

ஐராவதத்தின் ஒவ்வொரு கனமான அடியிலும், அம்புகள் துண்டு துண்டாக உடைக்கத் தொடங்கின, அர்ஜுனன் அதிக அம்புகளை எய்து இடைவெளிகளை நிரப்பினான்.

இறுதியாக, ஐராவதம் வந்து, குந்தி தேவி அனைத்து உலகங்களிலும் உள்ள சிறந்த சின்னமான ஐராவதத்தின் மூலம் விநாயகப் பெருமானை வழிபட்டாள்.

சதுர்த்தி தினத்தில் விநாயகரை வழபடுவது போன்று வாய்ப்பு கிடைத்தால் யானையும் வழிபாடு செய்தால் மிகுதியான பலன்களைப் பெறலாம்.

# ஆவி பேய்கள் என்பவை என்ன?

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸர் அருளுகிறார்: “ஆவிகள், பிசாசுகள், சூன்யக்காரிகள், இரத்தக் காட்டேரிகள் என்பனவற்றைப்பற்றிய எல்லா வகையான கதைகளும் உண்டு. இத்தகைய உயிரிகளுடன் பலவகையான அனுபவங்களைப் பெற்றிருப்பதாகக் கூறிக்கொள்பவர்கள் கொஞ்சம் பேர் அல்ல. எனது கவனத்திற்கு வந்துள்ள பல சம்பவங்களில், சம்பந்தப்பட்ட அனேகர் அளவு கடந்த கடுமையான மற்றும் வியாதியால் பீடிக்கப்பட்ட கற்பனைகளினால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர். அவர்களில் ஒருவர், ஒரு பெண்மணி, இரத்தக் காட்டேரிகளைப் பற்றிய ஒரு புத்தகத்தைத் தற்செயலாகப் படிக்க நேர்ந்தது. அவளுடைய கற்பனைகள் மிகவும் தீவிரமாக இருந்ததால், அதில் ஓர் இரத்தக்காட்டேரி தனது இரத்தத்தை ஒவ்வோர் இரவும் உறிஞ் சுவதாக அவள் நம்பினாள். என்னைக் காணவந்தபோதெல்லாம் அவள் சுகமுற்றாள். ஆனாலும் ஓர் இரத்தக்காட்டேரியின் இரவுக் காலத்திய வருகையைப் பற்றிய எண்ணம் அவளுக்குள் மிகவும் வலிமையாக இருந்ததால், சிறிது காலத்திற்குப் பிறகு அவள் மீண்டும் நோயுற்றாள். தனது சொந்த எண்ணங்களாலேயே அழிக்கப்பட்டு அவள் அகால மரணமடைந்தாள்.”

“பதினாறாம் நூற்றாண்டில் சூன்யக்கலையில் நம்பிக்கை பரவிக்கிடந்தது. அத்துடன் சூன்யக்காரிகள் என சந்தேகிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோர் பேய்களுடன் உடந்தையாக இருப்பவர்கள் எனத் தவறாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர். ஜோன் ஆஃப் ஆர்க், சூன்யத்தால் பீடிக்கப்பட்டவள் எனக் கருதப்பட்டு கம்பத்தில் கட்டப்பட்டு எரிக்கப்பட்டாள். இந்தப் பிரபஞ்சத்தின் பின்னால் மறைந்துள்ள, இன்னும் ஓர் உலகமாகிய சூட்சும உலகம் உள்ளது. அங்கு வசிப்போர் ஒளியினாலான வடிவத்தால் உடுத்தப்பட்டுள்ளனர். ஸ்தூல தேகம் இல்லாததால் நமக்குப் புலப்படாத அவர்கள், “ ஆவிகள்” ஆவார். நாம் நமது சொந்த ஸ்தூல உலகிற்குள் கட்டுப்பட்டுள்ளதுபோல் அவர்கள் சாதாரணமாக தங்களுடைய சொந்தப்பிரதேசத்திற்குள் கட்டுப்பட்டுள்ளனர். தீய நோக்கம் கொண்ட சூட்சும வாசிகளுக்கு இப்பூவுலக மட்டத்திற்குள் புகுந்து நமகு தீங்கு செய்வது எளிய விஷயமாக இருந்தால், நாம் எல்லா நேரமும் பயத்துடன் வாழ நேரிடும். நமது இப்பூமியில் ஏற்கனவே போதுமான அளவு பயங்கரம் உள்ளது. இலட்சக்கணக்கான, உயிருக்கு ஆபத்தை விளைவிக்கூடிய கிருமிகள் ஏற்கனவே நம்மைச் சுற்றிக் காற்றில் மிதந்து கொண்டிருக்கவில்லையா? நிச்சயமாக இறைவன், நமது அல்லல்களுடன்

137
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக


www.aanmeegamalar.com

பிசாசுகளின் தலையீட்டையும் சேர்க்கமாட்டான்."

"இருப்பினும் 'அலையும் ஆவிகள்' எனப்படும் சில சூட்சும வாசிகள் உள்ளன. இவ்வுலகின்மீதான வலுவான பற்றினால் அவை இப்பூவுலகுடன் பந்தப்பட்டு இருப்பவை ஆகும். மேலும் புலன் இன்பங்களுக்காக ஒரு ஸ்தூல உருவத்திற்குள் நுழையும் ஆசையுடன் இருப்பவை. இத்தகையவை பொதுவாக கண்களுக்குத் தென்படுவதில்லை. அத்துடன் ஒரு சாதாரண மனிதனைப் பாதிப்பதற்கான சக்தி இவற்றிற்கு இல்லை. அலையும் ஆவிகள் எப்போதாவது. எவராவது ஒருவரின் உடல் மற்றும் மனதினுள் புகுந்து அவற்றை தன்வசப்படுத்திக் கொள்வதில் வெற்றியடைகின்றன. ஆனால் அந்த மனிதன் தனது மனதை காலியாகவோ அல்லது சிந்தனையற்றோ வைத்திருப்பதனால், ஒரு நிலையற்ற மனநிலையுடைவராகவோ அல்லது தனது மனதை பலவீனப்படுத்தியவராகவோ இருக்கும்போது மட்டும்தான் சாத்தியமாகிறது. இது ஒரு மோட்டார் வாகனத்தைப் பூட்டாமல் சாவியை, இயந்திரத்தை ஓட வைக்கும் கருவியில் விட்டுச்செல்வதுபோலாகும் சுற்றித்திரியும் எவரோ ஒருவர் அந்த வாகனத்தில் ஏறி ஓட்டிச் சென்று விடலாம். அலையும் ஆவிகள் தாம் மிகவும் பாசம் வைத்திருந்த தமது சொந்த உடலை இழந்துவிட்டதால் இன்னொருவருடைய – எவராவது ஒருவருடைய – ஸ்தூல தேக வாகனத்தில் ஒரு சுதந்திரமான சவாரி செய்ய விரும்புகின்றன. அலையும் ஆவிகள், ஆன்மீக எண்ணங்கள் மற்றும் உணர்வு நிலையின் உயர் அதிர்வை எதிர்கொள்ள முடியாது. விஞ்ஞான



குருப்ரியா

ரீதியாகப் பிரார்த்தனை மற்றும் தியான முறைகளை பயிற்சி செய்யும், இறைவனை நாடும் உண்மையான சாதகர்கள், ஒருபோதும் இத்தகைய ஆவிகளைப் பற்றி அச்சம் கொள்ளத்தேவையில்லை. இறைவன்தான் எல்லா ஆவிகளிலும் மாபெரும் ஆவி. இறை சிந்தனையோடு இருக்கும் ஒருவருக்கு தீய போக்குள்ள ஆவிகளால் எந்தக் கெடுதலும் வர முடியாது." மனிதனின் மூன்றும் – ஒன்றான அம்சம்.

மேலும் குருதேவர் தொடர்கிறார்: "சூட்சுமவாசிகள் என்றால் என்ன என்பதை நாம் நன்றாகப் புரிந்துகொள்வதற்கு, நாம் யார் என்பதை முதலில் புரிந்து கொள்வோம், இறைவன் நம்மைப் படைத்தபோது, முதலில் நாம் உணர்வு நிலையாக மட்டுமே இருந்தோம். நாம் இறைவனுடைய மனதின் ஒரு படைப்பாக இருந்தோம். எப்பொழுதாவது நீங்கள் புதியதாக ஒன்றை உருவாக்கினால், முதற்படியாக அதனுடைய மாதிரி ஒன்றை உங்கள் மனதில் உருவகப்படுத்திப் பார்ப்பது உண்மையல்லவா? அதன் பின்பு தேவையான பொருட்களை ஒன்று கூட்டி, இறுதியில் உங்கள் எண்ணத்தினுடைய, தொட்டுணரக் கூடிய உருவத்தை நிர்மாணிக்கின்றீர்கள். இதே முறையில் நாமும், படைப்பிலுள்ள அனைத்தும் மூன்றும் ஒன்றான அம்சமானவர்கள். மனம் (எண்ணம்) சூட்சுமம் (கட்டுமானப் பொருள்) மேலும் தேகம் (ஸ்தூல இறுதி வடிவம்),"

அவர் தொடர்கிறார்: " பூதஉடல் 16 மூலவஸ்துக்களால் ஆனது. இந்த ஸ்தூல மூல வஸ்துக்களின் இரசாயனக் கூறுகளை, அவை அறிவுத்திறனை வெளிப்படுத்துமாறு எவ்வாறு இறைவன் ஒன்று சேர்த்தான் என்பது ஓர் அதிசயம்! இருந்தபோதிலும், இந்த உடல், குறைகளைக் கொண்டதைத் தவிர வேறு எதுவுமில்லை. இதைவிட மேலான ஒன்றை நாம் கற்பனை செய்ய முடியும்! தீயினூடே செல்லவல்லதும் ஆனால் எரிந்துவிடாததுமான கல்நார் போன்ற ஓர் உடலை, முறியாத எலும்புகளும் விரும்பத்தகாத இருமலும் அற்ற ஓர் உடலை சிருஷ்டிக்க நான் விரும்புகிறேன். பூத உடல் துன்பங்களையும் வலிகளையும் கொண்டது. அதனுடைய 'பொறிக் கருவிகள்' அடிக்கடி 'காணாமற்போய்விடுகின்றன; முதலில் ஒரு பாகம், பின்பு இன்னொன்று செயலிழக்கின்றது. இறுதியில் இதயம் நின்று விடுகிறது,"

"அமெரிக்கர்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு புதிய மோட்டார் வாகனத்தை வாங்க விரும்புகின்றனர். ஆனால் அவர்கள் இப்பழைய தேக மாதிரியை அறுபது அல்லது எழுபது ஆண்டுகளுக்கு வைத்துக்கொண்டிருக்க



வேண்டியுள்ளது! இருந்தும், அது சீர்குலைந்துகொண்டிருந்தாலும், கூட, 'வா, அதைவிட்டு வெளியே வா' என்று இறைவன் இறுதியாக சொல்லும் வரை நீங்கள் வைத்திருக்கும் அந்த வடிவத்தையே தொற்றிக்கொண்டிருக்க விரும்புகிறீர்கள். பிறகு நீங்கள் நைந்துபோன தேக வடிவத்திலிருந்து வெளியே வந்து, ஒரு பிரகாசிக்கும் தேகமான, ஒளியாலும் சக்தியாலும் ஆக்கப்பட்ட சூட்சும தேகத்தில் அடைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறீர்கள். உங்களால் கேட்கவும் உங்களால் பார்க்கவும் உங்களால் சுவைக்கவும், உங்களால் தொடவும் முடியும் என்பதையும், அத்துடன் உங்களுடைய புதிய வடிவம் உடைவதற்கான எலும்புகளையோ காயப்படுவதற்கான தசைகளையோ கொண்டிருக்கவில்லை என்பதை உணர்ந்து நீங்கள் மகிழ்ச்சி அடைகின்றீர்கள்."

"நமது சூட்சும சரீரம் மன , உணர்ச்சி, மற்றும் உயிர் மின்னணு ரீதியாலான 19 மூல தத்துவங்களால் ஆக்கப்பட்டுள்ளது. இவையாவன: புத்தி, அகங்காரம் உணர்ச்சி, மனம் (புலன் உணர்வு நிலை) ஞானேந்திரியங்கள் ஐந்து (பார்த்தல்,, கேட்டல், நுகர்தல். ருசித்தல் மற்றும் தொடுதல் ஆகிய) தேக புலன் உறுப்புகளுக்குப்பின் உள்ள சூட்சும ஆற்றல்கள்); கன்மேந்திரியங்கள் ஐந்து (சந்ததி விருத்தி, கழிவு வெளியேற்றம், பேசுதல், நடத்தல் மற்றும் உடல் உழைப்பு செயல்பாடு ஆகிய) செயல்திறன்களுக்கான ஆற்றல்கள்); மற்றும் உயிர்சக்தியின் ஐந்து கருவிகள் (உருப்படுத்துதல், ஜீரணித்தல், கழிவு நீக்குதல் வளர்ச்சிதை மாற்றம், இரத்த ஓட்டம் ஆகிய ஸ்தூல தேகப்பணிகளை ஆற்றுவதற்கான ஆற்றல் பெற்றுள்ளவை)"

குருதேவர் தொடர்கிறார்: "இவை அனைத்தும் நுட்பமாக ஆக்கப்பட்டுள்ளன. கனவு உலகில் ஐம்புலன்களில் உள்ள ஆற்றலின் மூலம் நம்மால் பார்க்கவும் கேட்கவும் நுகரவும் சுவைக்கவும் தொடவும் முடியும். அத்துடன் சூட்சும உலகில் செவிகள், கண்கள், மூக்கு, நாக்கு மற்றும் தோல் ஆகிய ஸ்தூல உறுப்புகள் இல்லாமலேயே அனைத்து ஐம்புல நுகர்வுகளின் ஆற்றலையும் நம்மிடத்தில் பெற்றுள்ளோம். சூட்சும தேகம் பாரமற்றது; அத்துடன் ஒளி பயணிப்பது போல் பயணிக்கின்றது. சூட்சும தேகத்தை நீங்கள் விரும்பிய உடன் அணுவைப்போன்று மிகச்சிறியதாகவோ அல்லது மிகப்பெரியதாகவோ ஆக்கிக்கொள்ளமுடியும். ஏன் முடியாது? படைப்பின் பிரபஞ்ச திரைப்பட தெய்வீக இயக்குநரான இறைவனால், திரையிலுள்ள படத்தின் அளவை பெரியதாகவோ சிறியதாகவோ ஆக்க முடியும். சாசுவதமாகிய அறையிலிருந்து படச்சுருளை ஓட்டிக்கொண்டிருக்கும் அவன்தான் திரைப்படக்கருவியை இயக்குபவன். அவனுடைய


அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்

SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

எல்லையற்ற ஒளியின் தனிப்படுத்தப்பட்ட வெளிப்பாடுதான் நீங்கள். ஆகவே பூத உடலை மிக வலிமையாகப் பிணைத்துள்ள பிரபஞ்சக் கட்டுப்பாடுகளிலிருந்து உங்களுடைய சூட்சும தேகம் பெருமளவில் விடுதலை பெற்றுள்ளது.”

“ஆனால் பூதவுடலையும் சூட்சும உடலையும் இறைவன் நிஜமாகவே உருவாக்கும் முன், எவ்வகையான வஸ்துக்களை அவற்றினுள் வைக்க வேண்டும். என்பதைப்பற்றி அவன் முதலில் சிந்திக்க வேண்டியிருந்தது. ஆகவே நமக்கு 35 மூல வஸ்துக்களைக்கொண்ட ஒரு காரண அல்லது எண்ணமயமான உடலும் கூட உள்ளது. அவையாவன: பூத உடலுக்கான மூலப்பொருட்களை உருவாக்கும் 16 எண்ணங்களும், சூட்சும உடலுக்கான மூலப்பொருட்களைக்கொண்ட 19 எண்ணங்களுமாகும். இக்காரண எண்ண ரூ வடிவங்களியிருந்து சூட்சும தேகத்தினுடைய உயிர் சக்தியின் ஐந்து கருவிகள், ஒளிமயமான சூட்சும தேகத்தையும், சடப்பொருளாலான பூதவுடலையும் கண்ணுக்குப்புலப்படும்படி செய்கின்றன. இந்தக் கருத்தைப் பின்வரும் ஆய்வு தெளிவுப்படுத்துகின்றது. உங்கள் கண்களை மூடி இடது பக்கத்தில் ஒரு குதிரையை கற்பனை செய்து பாருங்கள். முதலில் உங்களுடைய கற்பனை மங்கலாக இருக்கின்றது. ஆனால் நான் ஒரு வெள்ளைக் குதிரை எனக் குறிப்பிட்டால், அதை நீங்கள் மிக எளிதாகக் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது. இப்பொழுது ஒரு கறுப்புக்குதிரையை வலது புறத்தில் எண்ணிக் கொள்ளுங்கள். நீங்கள் மன அல்லது எண்ண வடிவங்களை உண்டாக்கின்றீர்கள். அவைகளைத் திருப்பி வலப்புறம் வெள்ளைக்குதிரை இருக்குமாறு செய்யுங்கள். இன்னும் சிறிதளவு வலுவாக உங்களால் கற்பனை செய்துபார்க்க முடியுமானால், இந்த எண்ண வடிவங்களை நிஜமான உருவங்களாக நீங்கள் பார்க்க முடியும். இதைத்தான் நீங்கள் கனவில் செய்கின்றீர்கள். அப்போது உங்களுடைய எண்ண ரூ வடிவங்கள் உங்களுக்குப் புலப்படுமாறு ஆகுமளவிற்கு உங்கள் மனம் வெகுவாக ஒருமுகப்பட்டுள்ளது. கனவுகளும் இறைக்காட்சிகளும் ஒளி மற்றும் சக்தியால் ஆக்கப்பட்டுள்ளதால் அவை அடிப்படையில் சூட்சுமத்தன்மை கொண்டவை. இச்சூட்சும வடிவங்களான கறுப்பு மற்றும் வெள்ளைக் குதிரைகளால் ஐம்புலன்களுக்கும் உண்மையாக ஆகும்படி உங்களால் நிஜமாகவே செய்ய முடியுமானால், ஒரு ஸ்தூல சிருஷ்டியை நீங்கள் படைத்துவிட்டவராவீர்கள்.”

“ ஆகவே அடிப்படையில் நாம் மனிதனின் எண்ண அல்லது காரண சரீரத்தை நிர்மாணிக்கும் 35 எண்ணங்களினால் ஆக்கப்பட்டுள்ளோம். இந்த 35 எண்ணங்களினுள் அடைக்கப்பட்டுள்ளதுதான் இறைவனின் சக்தி. அதுவே ஆன்மா என அழைக்கப்படுகிறது. ஒரு வாயு அடுப்பின் சிறிய துவாரங்களிலிருந்து ஒரே சுவாலையானது பல தனி சுவாலைகளாக வெளிவருவதுபோல், நாம் அனைவரும் இறைவனிலிருந்து பல தேகங்களுக்குள் பாயும் ஒரே ஒளியாவோம்”




மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்


குருதேவர் கூறும் மேற்கண்ட இரகசியத்தை ஒவ்வொரு மனிதனும் அறியவேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால் ‘தியானம்’ செய்ய வேண்டும். இவ்வுலகிலுள்ள எல்லாப்பொருட்களையும் சுத்தம் செய்வதற்காக, ஒவ்வொரு வழியை கண்டுபிடித்துள்ளனர். ஆனால் நம் உள்ளத்தை சுத்தம் செய்வது எப்படி?அது எந்தப் பொருளாலும் சாத்தியமாகாது. அதற்கு தியானம் தான், ஆழ்ந்த தியானம் மட்டும்தான் சிறந்த மார்க்கம். உள்ளம் சுத்தமானால் அல்லது தியானம் ஒன்றினால் மட்டும்ததான் இறைவனின் இவ்வாறான இரகசியத்தை முழுவதும் அறியமுடியும்,. எப்பொழுதும் இறைநினைவுடன் இருப்பதே மனம் தூய்மையடைவதற்கான வழியாகும். அதற்காக நேரத்தை ஒதுக்கி தியானம் செய்தால் இறைவனின் அருட்பார்வையில் அல்லது அவனுடைய அருட்கடாட்சத்தில் உள்ளத்திலுள்ள அழுக்கெல்லாம் கழுவப்படும். பின்னர் இறைவனே நமக்கு எல்லாவற்றையும் காட்டுவான். இதைத்தான் குருதேவர் தன்னுடைய போதனைகளில் கூறியுள்ளார். அதை நாம் அனைவரும் கடைபிடிக்கத்தான் வேண்டும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

# விநாயகரின் 51 வடிவங்களும் வடிவங்களுக்கான பலன்களும்



விக்னங்களைத் தீர்ப்பதில் முதலில் உள்ளவர் விக்னேஷ்வரன், இதன் காரண மாகத்தான் பல்வேறு நாடுகளிலில் உள்ள மக்களும் விநாகயகரை பல்வேறு வடிவங்களில் கொண்டாடி மகிழ்கின்றனர்.

பிள்ளையாரை வணங்கி செயலைத் தொடங் கினால் தன்னம்பிக்கையுடன் வெற்றிகரமாக எதிர்பார்த்த பலனுடன் செவ்வனே செய்து முடிக்கலாம் என்பது நம்பிக்கை.

ஆதியில் காணபத்தியம் என்ற ஒரு மதம் விநாயகரை மட்டுமே துதித்து வழிபடும் ஒரு மதமாகவே இருந்துள்ளது. இந்து மதத்தினுள் உள்வாங்கப்பட்ட சமயமான காணாபத்தியம் எனும் பிரிவு விநாயகரை மையப்படுத்திய சமயம். என்றும் கூறுவார்கள்.

கால நிலை மாற்றம் போன்றவற்றால் தனித் தனியாக பிரிந்திருந்த சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம் போன்ற இன்னும் பல் வேறு மதங்கள் ஒன்றினைந்து இந்து மதத்திற்குள் ஒன்றாக ஐக்கியமாகின.

விநாயகர் ஒவ்வொரு கால கட்டத்திலும் பல் வேறு வடிவங்களில் திகழ்கிறார் என்று ‘கணேச புராணம்’, கூறியுள்ளது. கிருத, திரேதா, துவாபர, கலி ஆகிய நான்கு யுகங்களிலும் நான்கு அவதாரங்களாக அவதரிப்பதாகக் கூறுகின்றது.

அதன்படி, கிருதாயுகத்தில் மகாகடர் என்றும், திரோதா யுகத்தில் மயூரேசர் என்றும், துவாபர யுகத்தில் கஜானனன் என்றும், கலியுகத்தில் கணேசன், விநாயகர், பிள்ளையார் போன்ற திருநாமங்களுடன் விளங்குவதாகவும் கூறப் பட்டுள்ளது.

### கணபதி

கணங்களிற்கு அதிபதி. பூதகணங்களிற்கெல் லாம் அதிபதியாதலினால் கணபதி என்றழைக்கப் படுகின்றார்.

### ஆனைமுகன்

ஆனை அதாவது யானை முகத்தை உடையவ ராதலால் ஆனைமுகன் என்றழைக்கப்படுகின்றார்.

### கஜமுகன்

கஜம் என்றாலும் யானையைக் குறிக்கும். யானைமுகத்தை உடையவராதலினால் கஜமுகன் என்றழைக்கப்படுகின்றார்.

### விக்னேஸ்வரன்

விக்கினங்களைத் தீர்க்கும் ஈஸ்வரன் அதாவது பிரச்சினைகளைத் தீர்க்கும் கடவுள்

ஒவ்வொரு பெயருக்கும் ஒவ்வொரு பலன்:

இது தவிர பல்வேறு திருநாமங்கள் விநாயகப் பெருமானுககு உள்ளதாகவும், ஒவ்வொரு நாமத்திற்கும் ஒவ்வொரு பலன் உள்ளதாகவும் புராணங்கள் கூறுகின்றது. அதில் மிகவும் முக்கியமாக 51 திருநாமங்கள் விளங்குகின்றன.

## 51 நாமங்களும் பலன்களும்:

| | | |
|---|---|---|
| 1 | ஏகாக்ஷர கணபதி | பரிபூரண சித்தி |
| 2 | மகா.கணபதி | கணபதி அருள் கிடைக்கும் |
| 3 | த்ரைலோக்ய மோஹன கர கணபதி | ஸர்வ ரக்ஷாப்ரதம். |
| 4 | லக்ஷ்மி கணபதி | தன அபிவிருத்தி |
| 5 | ருணஹரள கணபதி | கடன் நிவர்த்தி |
| 6 | மகா வித்யா கணபதி | தேவ அனுக்ரகம் |
| 7 | ஹரித்ரா கணபதி | உலக வசியம் |
| 8 | வக்ரதுண்ட கணபதி | அதிர்ஷ்ட லாபம் |
| 9 | நிதி கணபதி | நிதி ப்ராப்தி |
| 10 | புஷ்ப கணபதி | தானிய விருத்தி |
| 11 | பால கணபதி | மகிழ்ச்சி, மன நிறைவு |
| 12 | சக்தி கணபதி | சர்வ காரியசித்தி |
| 13 | சர்வ சக்தி கணபதி | சர்வ ரக்ஷாப்ரதம் |
| 14 | க்ஷிப்ர ப்ரஸாத கணபதி | துரித பலன் |
| 15 | குக்ஷி கணபதி | ரோக நிவர்த்தி |
| 16 | ஸ்ரீ சந்தான லட்சுமி கணபதி | மக்கட்செல்வம் |
| 17 | ஸ்ரீ ஸ்வர்ண கணபதி | ஸ்வர்ண பிராப்தி |
| 18 | ஹேரம்ப கணபதி | மனச்சாந்தி |
| 19 | விஜய கணபதி | வெற்றி |
| 20 | அர்க கணபதி | தோஷ நிவர்த்தி |
| 21 | ச்லேதார்க்க கணபதி | மாலா மந்திரம் |
| 22 | உச்சிஷ்ட கணபதி | திரிகால தரிசனம் |
| 23 | போக கணபதி | சகலலோக ப்ராப்தி |
| 24 | விரிவிரி கணபதி | விசால புத்தி |
| 25 | வீரகணபதி | தைரியம் |
| 26 | சங்கடஹர கணபதி | சங்கட நிவர்த்தி |
| 27 | கணேசாங்க நிவாரணி | லட்சுமி மந்திர சித்தி |
| 28 | விக்னராஜ கணபதி | ராஜயோகம் |
| 29 | குமார கணபதி | மாலா மந்திரம் |
| 30 | ராஜ கணபதி | மாலா மந்திரம் |
| 31 | ப்ரயோக கணபதி | மாலா மந்திரம் |
| 32 | தருண கணபதி | தியானயோக ப்ராப்தி |
| 33 | துர்கா கணபதி | துக்க நிவாரணம் |
| 34 | யோக கணபதி | தியானம் |
| 35 | நிருத்த கணபதி | கலா பிவிருத்தி |
| 36 | ஆபத்சகாய கணபதி | ஆபத்துகள் நீங்குதல் |
| 37 | புத்தி கணபதி | வித்யா ப்ராப்தி |
| 38 | நவநீத கணபதி | மனோவசியம் |
| 39 | மோதக கணபதி | சம்பூர்ண பலன் |
| 40 | மேதா கணபதி | மேதா பிவிருத்தி |
| 41 | மோஹன கணபதி | ரக்ஷாப்ரதம் |
| 42 | குரு கணபதி | குருவருள் |
| 43 | வாமன கணபதி | விஷ்ணு பக்தி |
| 44 | சிவாவதார கணபதி | சிவபக்தி |
| 45 | துர்வாக கணபதி | தாப நிவர்த்தி |
| 46 | ரக்த கணபதி | வசிய விருத்தி |
| 47 | அபிஷ்டவாத கணபதி | நினைத்ததை அடைதல் |
| 48 | ப்ரம்மண கணபதி | ப்ரம்ம ஞானம் |
| 50 | மகா கணபதி | ப்ரணவமூலம் |
| 51 | வித்யா கணபதி | ஸ்ரீ வித்தை |



# ஆண்டவன் பக்தியோடு பக்தர்களையும் ரசிக்கிறான்

கொத்தவரங்காய் பித்தத்தை ஏற்றும். முருங்கைக்காய் வாயுவைத் தூண்டும். இதுபோல் பக்தியைத் தூண்டும் காய்கறிகளே இல்லை. அதனால் பக்தியைக் கடவுளே தூண்டுகிறான்.

❖ ❖ ❖

மனித மனம் கெடாமல் இருக்க, மனிதன் ஆண்டவனை மனதிலேயே கொள்ள வேண்டும்.

❖ ❖ ❖

ஆடு, மாடு இன்னும் பல பொருள்களையும் விலைக்கு வாங்கலாம். ஆனால் அன்பு ஒன்றையே கொண்டு, அகில உலகையும் உனதாக்கிக் கொள்ளலாம். ஆனால் அந்த அன்பு சுத்தமாயிருத்தல் வேண்டும்.

❖ ❖ ❖

வளர்த்த கிளி வெளியே பறந்து சென்றால் வேறு எங்கும் வாழாது. இறைவனையும், நல்ல குருநாதனையும் பார்த்த மனம், வேறு எங்கும் அமைதியைப் பெறாது.

❖ ❖ ❖

சிந்தனை பழுதுபட்டிருந்தால் "ஆன்மா" மங்கிக் கொண்டே வரும்.

❖ ❖ ❖

கரி ஏறும் சிம்னி விளக்கைத் துடைப்பது போல் விரதத்தால் ஆன்மாவைத் துடை.

❖ ❖ ❖

பக்த கோடிகள் தங்களது ஆன்மாவைத் துடைத்துக் கொள்ளும் வேலையே விரதமாகும்.

❖ ❖ ❖

நெற்றிப் பொட்டு என்ற நெற்றிக் கண்ணைக் கொண்டு சிந்தி. சிந்தனையாளன் என்ற பெயர் வரும்.

❖ ❖ ❖

கடவுளை நினைத்து நெற்றிக்கண் என்ற பட்டனை அமுக்கு. அங்கிருந்தே கடவுளைப் பார்க்கலாம்.

❖ ❖ ❖

காகத்திற்கு இட்லி போடுவது போல் உனது சிந்தனைக்கு புத்தியைப் போடு. அது தானாக சிந்திக்கும். பிறகே உனக்கு "ஞானி" என்ற பட்டப் பெயர் வரும்.

❖ ❖ ❖

பற்றி எரிகின்ற நெருப்புக் குச்சிக்கு ஆண், பெண் வித்தியாசம் தெரியாது. அது போன்றே "ஞானம்" அனைவருக்கும் பொது என்பதால், ஞானத்தைப் பொதுவிலும், இறைவனை அம்பலத்திலும் பார்த்தனர்.

❖ ❖ ❖

விளையாட்டைப் பார்க்கும் பொதுமக்கள் விளையாட்டோடு விளையாட்டு வீரர்களையும் ரசிக்கிறார்கள். இதுவே பக்தர்களின் நிலை. ஆண்டவன் பக்தியோடு பக்தர்களையும் ரசிக்கிறான்.

❖ ❖ ❖



ஓடும் நீரோடையை மனக் கண்ணால் பார்த்துக் கொண்டே இரு. தியானம் கைக்கூடும்.

❖ ❖ ❖

உடம்பு என்ற ஒன்று இருக்கும் வரை உடம்பு சரியில்லை என்கிற

ஆன்மிகமலர் .காம்

தத்துவமும், உண்மையும் சரியாகவே இருக்கிறது. ஆனால் அதே உடம்பினுள் ஆண்டவனை வைத்துவிட்டேன் என்று சொல்லிவிடு. அவன் மட்டும் எப்பொழுதும் சரியாகவே இருக்கிறான்.

❖ ❖ ❖

கடவுளுக்கு இடங்கொடுக்க மனதில் இடம் வேண்டும் என்று நினை. எல்லாம் எளிதில் முடிந்துவிடும்.

❖ ❖ ❖

புத்தி உள்ளவனுக்கு புத்திசாலிகளைச் சந்தித்துக் கொண்டிருப்பதே முக்கியம்.

❖ ❖ ❖

உலகை ஆட்டிப் படைக்கின்ற கடவுளுக்கு உலகில் ஆடும் பொம்மையான நானே முக்கியம்.

❖ ❖ ❖

வைக்கோல் போர் முழுவதும், "நாயே இது உனக்கு உணவு" என்று சொன்னாலும் நாய் மகிழ்ச்சி அடையாது. இதேபோல் உலகமே கிடைத்தாலும், பக்தனுக்கு கடவுளே சந்தோஷம் ஆகும்.

❖ ❖ ❖

இசை, கலை, நாதம்..
இவைகளின் கர்த்தாவாய் இரு.

❖ ❖ ❖

கர்த்தாவாய் இருந்து கொண்டே சுவை. பிறகே அவைகளின் உண்மைத் தொண்டனாய் இருக்க முடியும்.

❖ ❖ ❖

இறைவனுக்குக் கர்த்தாவாய் இரு. இதன் பிறகு இறைவனின் தொண்டனாக இருப்பது சுலபம்.

❖ ❖ ❖

கல்வி, மனிதனிடம் தோன்றுகின்ற ஒரு அற்புதக் காற்று. உலகம், பொரி கடலை. உன்னிடம் அற்புதமிருந்தால் உலகையே ஊதித் தள்ளலாம்.

❖ ❖ ❖

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

www.aanmeegamalar.com

எங்கள் சேவைக்கு உங்களின் உதவி தேவை

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள்
**ரூ.10** முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
Paytm
BHIM

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

# திருவோடு ஏந்தி பிச்சை எடுத்து சுந்தரரின் பசியைப் போக்கிய இறைவன்

சென்னை செங்கல்பட்டு தேசீய நெடுஞ் சாலையில் சிங்கப்பெருமாள்கோவில் சென்று அங்கிருந்து ஸ்ரீபெரும்புதூர் செல்லும் சாலையில் திரும்பி ரயில்வே கேட் தாண்டி சுமாராக 1 கி.மி. தூரம் சென்ற பின் வலதுபுறம் பிரியும் சாலையில் மேலும் 1 கி.மி. தூரம் சென்றால் திருக்கச்சூர் ஆலயத்தை அடையலாம். ஊரின் நடுவே கோவில் உள்ளது. சிங்கப்பெருமாள்கோவில் பேருந்து நிறுத்தத்தில் இருந்து ஆட்டோ மூலம் செல்வது நல்லது. இல்லாவிடில் சுமார் 2 கி.மி. தொலைவு நடந்து செல்ல வேண்டும்.

சிவபெருமான் சுந்தரருக்காக தனது கையில் திருவோடு ஏந்தி பிச்சை எடுத்து சுந்தரரின் பசியைப் போக்கிய தலம்.

தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவஸ்தலங்களில் தியாகராஜர் சந்நிதி உள்ள கோவில்களில் இத்தலக் கோவிலும் ஒன்றாகும்.

இத்தலத்திலுள்ள இந்த பைரவர் சந்நிதி மிகவும் சிறப்பு வாய்ந்தது. இத்தல விருட்சமான ஆலமரம் மக நட்சத்திரத்திற்குரிய மரமாகும்,

ஆகவே மக நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இத்தல இறைவனை வழிபடுவது மிகவும் விசேஷ மானதாகும்.

தலவரலாறு

அமிர்தம் கிடைப்பதற்காக தேவர்களும், அசுரர்களும் பாற்கடலை கடைந்தார்கள். மந் தார மலையை மத்தாக்கி, வாசுகி பாம்பைக் கயிறாக்கி பாற்கடலைக் கடையும் சமயத்தில் மந்தார மலை கனம் தாங்காமல் மூழ்கத் தொடங்கியது. அது கடலில் மூழ்காமல் இருக்க திருமால் ஆமை (கச்சபம்) வடிவெடுத்து மந்தார மலையின் அடியில் சென்று மலையை தாங்கி நின்றார். திருமால் இவ்வாறு ஆமை உருவில் மலையின் கனத்தைத் தாங்கக்கூடிய ஆற்றலைப் பெற இத்தலத்திற்கு வந்து சிவபெருமானை வழிபட்டதாக வரலாறு கூறுகிறது. ஆமை (கச்சபம்) வடிவத்தில் மஹாவிஷ்னு சிவபெரு மானை வழிபட்டதால் இத்தலம் திருக்கச்சூர் என்று பெயர் பெற்றது. இத்தலம் ஆதிகச்சபேஸம் என்று அழைக்கப்படுகிறது. இத்தலத்தில் உள்ள கூர்ம தீர்த்தத்தில் நீராடி பிரதோஷ நாட்களில்



கச்சபேஸ்வரரை வணங்கினால் எல்லா தோஷங் களும் நீங்கும். செல்வம், கல்வி, இன்பம் கிடைக்கும் என்று தல புராணம் கூறுகிறது.

சிவபெருமான் சுந்தரருக்காக தனது கையில் திருவோடு ஏந்தி பிச்சை எடுத்து சுந்தரரின் பசியைப் போக்கிய தலம் என்ற பெருமையும் திருக்கச்சூருக்கு உண்டு. இத்தலத்திற்கு வந்த சுந்தரர் ஆலயத்தினுள் சென்று சிவபெருமானை பக்தியுடன் வழிபட்டு வெளி வந்தார்.

வெகு தொலைவில் இருந்து திருக்கச்சூர் வந்த காரணத்தினால் களைப்பும் அதனுடன் பசியும் சேர்ந்து தள்ளாடியபடி கோவிலின் வெளியே உள்ள மண்டபத்தில் படுத்து கண் களை மூடுகிறார். சுந்தரரின் நிலையைக் கண்ட இறைவன் கச்சபேஸ்வரர் ஓர் அந்தணர் உருவில் சுந்தரரின் தோளைத் தட்டி எழுப்புகிறார். அவரை உட்காரச் சொல்லி வாழையிலை விரித்து அன் னம் பரிமாறி குடிக்க நீரும் கொடுக்கிறார்.

அன்னம்பலவித வண்ணங்களுடனும் பலவகை சுவையுடனும் இருப்பதைக் கண்ட சுந்தரர் காரணம் கேட்கிறார். சமைத்து உணவு கொண்டுவர நேரம் இல்லாததால் பல வீடு களுக்குச் சென்று பிச்சை வாங்கிவந்து உண்வு கொடுத்ததாக அந்தணர் சொல்கிறார்.

அந்தணர் செயலில் நெகிழ்ந்து போன சுந்தரர் எதிரே உள்ள குளத்திற்குச் சென்று கைகளைக் கழுவிக் கொண்டு திரும்பி வந்து பார்த்தால் அந்தணர் மாயமாய் மறந்து போயிருக்கக் கண்டார். இறைவனே தனக்காக திருக்கச்சூர் வீதிகளில் தனது திருவடிகள் பதிய நடந்து சென்று பிச்சையெடுத்து அன்னமிட்டதை நினைத்து இறைவனின் கருணையைக் கண்டு மனம் உருகினார் சுந்தரர்.


திருக்கச்சூர் தலம் ஆலக்கோவில் என்ற பெயருடனும் அழைக்கப்படுகிறது. இவ்வாலயத்தின் மூலவர் கச்சபேஸ்வர்ர். இருந்தாலும் இவ்வாலயம் தியாகராஜசுவாமி திருக்கோவில் என்றே அழைக்கப்படுகிறது. தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவஸ்தலங்களில் தியாகராஜர் சந்நிதி உள்ள கோவில்களில் இத்தலக் கோவிலும் ஒன்றாகும்.

கிழக்கு திசை நோக்கி அமைந்துள்ள இந்த ஆலயத்திற்கு கோபுரமில்லை. கோவிலுக்கு எதிரில் ஒரு பெரிய குளம் இருக்கிறது. இது கூர்ம தீர்த்தம் என்று வழங்கப்படுகிறது. திருமால் கூர்மாவதாரம் எடுத்தபோது இக்குளத்தை உண்டு பண்ணியதாகக் கருதப்படுகிறது.

இக்குளத்திற்கு அருகில் தான் சுந்தரர் பசிக் களைப்பால் படுத்திருந்த 16 கால் மண்டபம் இருக்கிறது. மண்டபத் தூணகளில் அழகிய சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கிழக்கிலுள்ள நுழைவாயில் வழியாக உள்ளே சென்றவுடன் கிழக்கு வெளிப் பிரகாரத்தில்கொடி மரம், நந்தி, பலிபீடம் ஆகியவை அமைந்துள்ளன. தெற்கு வெளிப் பிரகாரத்தில்27 தூண்களை உடைய நட்சத்திர மண்டபம் உள்ளது.

நட்சத்திர மண்டபத்தைக் கடந்து நேரே சென்றால் தியாகராஜர் சந்நிதி உள்ளது. இவர் உபயவிடங்கர் எனப்படுகிறார். மகாவிஷ்ணுவிறகு இத்தலத்தில் இறைவன் தனது நடனத்தைக் காட்டி அருளியுள்ளார். நட்சத்திர மண்டபத்தில் உள்ள ஒரு தூணில் ஆமை உருவில் மகாவிஷ்ணு சிவலிங்கத்தை வழிபடும் சிற்பம் ஒன்று உள்ளது.



மண்டபத்தில் உள்ள தெற்கு வாயில் வழியே உள்ளே சென்றால் இறைவி அஞ்சனாட்சியின் சந்நிதி உள்ளது. நான்கு திருக்கரங்களுடன் நின்ற நிலையில் அம்பாள் அருள்பாலிக்கிறாள். வலம் வருவதற்கு வசதியாக அம்மன் சந்நிதி ஒரு தனிக கோவிலாகவே உள்ளது. அம்பாள் சந்நிதி முன் உள்ள மண்டபத்திதிருந்து மற்றொரு கிழக்கு நோக்கிய வாயில் வழியாக உள்ளே சென்றால் கருவறையில் கிழக்கு நோக்கிய சந்நிதியில் இறைவன் கச்சபேஸ்வரர் காட்சி தருகிறார். திருமாலுக்கு அருளிய இவர் ஓர் சுயம்பு லிங்கமாவார்.

கருவறை சுற்று வலம் வரும்போது வடக்குச் சுற்றின் வடகிழக்கு மூலையில் நடராஜர் சந்நிதி அமைந்துள்ளது. கருவறை கோஷ்ட மூர்த்திகளாக விநாயகர், தட்சினாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். வடக்கு வெளிப் பிரகாரத்தில் கிழக்கு நோக்கிய முருகன் சந்நிதியும், விருந்திட்ட ஈஸ்வரர் சந்நிதியும் அமைந்திருக்கின்றன.

விருந்திட்ட ஈஸ்வரர் சந்நிதிக்கு அருகே வடக்குநோக்கிய சுந்தரர் சந்நிதியும் அமைந்துள்ளது. வடக்கு வெளிப் பிரகாரத்தில் தெற்கு நோக்கிய பைரவர் சந்நிதியும் இருக்கிறது. இத் தலத்திலுள்ள இந்த பைரவர் சந்நிதி மிகவும் சிறப்பு வாய்ந்தது.

இத்தலம் ஒரு திருப்புகழ் வைப்புத் தலம். இஙுகு முருகப் பெருமான் ஒரு முகமும், நான்கு திருக்கரங்களும் கொண்டு இரு தேவியருடன் எழுந்தருளியுள்ளார். இத்தல விருட்சமான ஆலமரம் மக நட்சத்திரத்திற்குரிய மரமாகும், ஆகவே மகநட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இத்தல இறைவனை வழிபடுவது விசேஷமானதாகும்.

திருக்கச்சூர் கோவிலின் இணைக் கோவிலான மலைக் கோவில் ஆலக்கோவிலில் இருந்து சுமார் 1 கி.மி. தொலைவில்அமைந்துள்ளது. இக்கோவிலில் குடி கொண்டிருக்கும் இறைவன்மருந் தீஸ்வரர் என்றும் இறைவி இருள்நீக்கிய அம்மை என்றும் அழைக்கப்படுகின்றனர்..

– சிவத்திரு.
குமரேசன் இராஜசிம்மன்,
பேராசிரியர் S.I.V.E.T கல்லூரி,
சென்னை, போன்: 919003296221

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

# aanmeegamalar.com

# இணையதளத்தை பார்க்கவும்






















சிவத்திரு.குமரேசன்

## மிகச் சிறப்பாக வெளியிடப்பட்ட

# கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் அவதார விழா சிறப்பு மலர்









கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள்அவதார விழா சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கட்டிக்குளம் சூட்டுக்கோல்மாயாண்டி சுவாமிகளின் 165வது அவதார விழா அவரது கருப்ப னேந்தல் மடத்தில் ஆகஸ்ட் 10 ந்தேதி தொடங்கி இரண்டு நாட்கள் நடைபெற்றது.



விழா தொடக்கமாக ஆன்மிக மலர்.காம் வெளியிட்ட மகாசித்தர் சூட்டுகோல் மாயாண்டி சுவாமிகள் அவதார விழா மலர் வெளியிடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் புதுக்கோட்டை மாவட்டம்பொன்னமரா வதி அருகே பனையபட்டி ஞானிபுல்லான்சாது சித்தர்வழிபாட்டுகுழுசெழியன்சுவாமிகள்அவதார சிறப்பு மலரை வெளியிட்டார். வியாழக் கிழமை காலை சிறப்பு யாகவேள்வியுடன்தொடங்கியது.

இதையொட்டி புனித நீர் கலசங்கள் வைத்து மாயாண்டி சுவாமிகள் சன்னதி முன்பு சிறப்பு கணபதி ஹோமம் நடத்தப்பட்டது. சிவாச்சாரி யார்கள் யாகத்தை நடத்தினர். பூர்ணாஹுதி முடிந்து தீபாராதனை காட்டப்பட்டதும் கலச நீராலும் பதினாறு வகையான அபிஷேகப் பொருட் களும் மாயாண்டி சுவாமிகளுக்கு அபிஷேகம் நடத்தி சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து சிறப்பு பூஜைகள், தீபாராத னைகள் நடைபெற்றன. திரளான மக்கள் அவதார விழாவில் பங்கேற்று மாயாண்டி சுவாமிகளை தரிசனம் செய்தனர். மேலும் கருப்பனேந்தல் மடத்தில் மாயாண்டி சுவாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மகா கணபதி, முருகன் சன்னதி களிலும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. கோயிலில் காலைமுதல் இரவுவரைநடைபெற்ற அன்னதானத்தில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

அன்று சூட்டுகோல் மாயாண்டி சித்தர் அவதரித்த பட்டமான் இல்ல கோவிலில் சிறப்பு பூஜை கள் நடைபெற்றது.

அங்கு உள்ள சூட்டுகோல் ராமலிங்கம் ஸ்வாமி சோமப்பாஸ்வாமி சன்னதிகளுக்கு மாலைகள் சாற்றப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இரவு பூ பல்லாகில் வீதி உலா நிகழ்ச்சியும் நடைபெற்றது. விழாவை காண மதுரை சிவகங்கை ராமநாதபுரம் புதுக்கோட்டை மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம்செய்தனர்.

ஆன்மிக மலர்.காம் சார்பில் இந்த ஆண்டு தொடக்கமாக வெளியிட்ட ஆன்மிக காலண்டர் தமிழகத்தில் பெறும் வரவேற்பை தொடர்ந்து மகாசித்தர் கட்டிக்குளம் தவதிரு சூட்டுகோல் மாயாண்டி சுவாமிகள் 165 வது அவதார விழா சிறப்பு மலராக கடந்த ஆகஸ்டு 10 ந்தேதி தவதிரு திருக்கழுக்குன்றம்சிவ தாமோதரன் சிவனடியார் அவர்களால் வெளியிடப்பட்டது.

அதை தொடர்ந்து கருப்பனேந்தல் மடத்தில் பனையபட்டி ஞானிபுல்லான் சாதுவழிபாட்டு குழு செழியன் ஸ்வாமிகள் வழங்கினார்.

நெல்லை மாவட்டம் பஞ்ச சபையில் முதல்சபையான ராஜவல்லிபுரம் செப்பிறை ஸ்ரீஅழகியகூத்தர் கோவிலில் சென்னையில் வசிக்கும்சிவபக்தர் திருநெல்வேலி சேர்ந்த செல்வராஜ் பக்த்தர்களுக்கு வழங்கினார்.

மானாமதுரை சுந்தர விநாயகர் கோவிலில் பஞ்சமுக ப்ரத்தியங்கிரா தேவிகோவில் ஸ்தபதி சண்முகம் பக்தர்களுக்கு வழங்கினார். பதினெட்டு சித்தர்களின் ஒருவரான இடைக்காடார் சித்தர் கோவிலில் இடைக்காட்டூர் இடைகாடர் சித்தர் கோவிலில் பௌர்ணமி அன்னதான வழிபாட்டு குழுவைசேர்ந்த திருப்பூர் மகாத்மா கருணை இல்லம் நிறுவனர் இடைக்காட்டூர் செந்தில்வேல் வழங் கினார்.

ஆகஸ்ட் 15 ந்தேதி சுதந்திர தின கிராம சபை கூட்டத்தில் கட்டிக்குளம் ஊராட்சி மன்ற தலைவர் சாந்தி துணை தலைவர் தமிழ் நேசன் ஆகி யோர் வழங்கினார்கள். தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் உள்ள ஸ்ரீ ஆனந்த விநாயகர் கோவிலில் திருவாச முற்றோதுதல் நிகழ்ச்சியில் பக்த்தர்களுக்கு கட்டிக்குளம் சூட்டுகோல் மாயாண்டி ஸ்வாமி அவதார விழா சிறப்பு மலர் வழங்க பட்டது.





அழகுராஜா

திருச்செந்தூர்ரில் நடைபெற்று வரும் ஆவணி பெருவிழாவிலும் மற்றும் டெல்லி நொய்டா, திருப்பதி, சென்னை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருச்சி ஸ்ரீ ரங்கம், ராமேஸ்வரம் ஆகிய ஆன்மிக தலங்களில் பக்த்தர்களுக்கு ஆன்மிக சிறப்பு மலர் வழங்க ஏற்பாடுகள் செய்யபட்டு உள்ளது.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182



# விநாயகர் பற்றிய
# வித்தியாசமான தகவல்கள்



செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் பவழத்தால் செய்யப்பட்ட விநாயகர செவ்வாய்க்கிழமை தோறும் தவறாமல் வணங்க வேண்டும். பவழத்தால் விநாயகர் செய்ய வசதியில்லாதவர்ள் செம்மண் அல்லது குங்குமத்தில் விநாயகர் செய்தும் வழிபடலாம். பில்லி சூனியம் போன்ற கொடுமையான தீய சக்திகள் விலகுவதற்கு அரசும், வேம்பும் பின்னியபடி உள்ள மரத்தடியில் இருக்கும் விநாயகரை வழிபட வேண்டும்.

ஸ்ரீவில்லிப்புத்தூரை அடுத்த இடையன்குளம் கிராமத்தில் உள்ள பிள்ளையார் எதிரே உள்ள மூஞ்சூருக்கு வெந்நீர் அபிஷேகம் செய்தால் தோஷம் நீங்கிவிடும் என்பது நம்பிக்கை

திருநெல்வேலியில் இருந்து ஐம்பது கிலோ மீட்டர் தொலைவில் காரையாரில் உள்ள அருவிக்கரை விநாயகருக்கு சித்தி விநாயகர் என்று பெயர். இடதுபுறம் கங்கையும், வலதுபுறம் பார்வதிதேவியும் உள்ளனர். இவ்விநாயகரை வணங்கினால் பிரம்மஹத்தி தோஷம் நீங்குமாம்.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டம் பழங்காமூரில் உள்ள வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நீண்டகாலமாக உள்ள புற்று ஒன்று விநாயகரின் வடிவ மாகவே மாறி உள்ளது. இந்த விநாயகர் பக்தர்களின் பாவங்களைப் போக்குகிறார்.

மதுரை மீனாட்சி திருக்கோவில் வளா கத்தில் திறந்தவெளியில் வன்னிமரத்தடியில் விநாயகர் அமர்ந்து அருள்பாலிக்கிறார். இவரை சுற்றி வன்னி, வேம்பு, மந்தாரை, அத்தி, நெல்லி, அரசு, வில்வம், பவளமல்லி, நாவல் ஆகிய ஒன்பது தலவிருட்சங்கள் உள்ளன. அவற்றை ஒரே வேளையில் ஒன்றாக தரிசிப்பதால் நவக் கிரக தோஷம் நீங்கி வளமான வாழ்வு கிட்டும் என்பர்.

திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரியின் உக்ரம் தணிக்க தேவியின் காதுகளில் ஸ்ரீசக்ரம், சிவசக்ரம் பொறித்த தாடங்கங்கள் அணிவித்த பிறகும், உக்ரம் தொடர்ந்தது. உடனே ஆதி சங்கரர் அன்னையின் முன் விநாயகரைப் பிரதிஷ்டை செய்ய, உடனே தேவி குளிர்ந்தாள். அந்த விநாயகரை இன்றும் தரிசிக்கலாம்.

காஞ்சிபுரத்தை அடுத்த தேனம்பாக்கம் சிவாலயத்தில் அம்மையப்பனுடன் அருள் புரியும் சோமகணபதியை தரிசிக்கலாம்.

சென்னை கிழக்கு தாம்பரம் ஸ்கந்தாஸ்ரமத்தில் புவனேஸ்வரி அன்னையின் எதிரே சுவாமிநாதன் எனும் பெயரில் முருகப் பெருமான் அருள, விநாயகர், கமல விநாயகர் எனும் திருநாமத்துடன் தேவியின் கருவறையருகே சந்நதி கொண்டுள்ளார்.

திருப்பாதிரிப்புலியூர் எனும் கடலூரில் அன்னை பெரிய நாயகியின் தவத்திற்கு உதவிய விநாயகர் கையில் பாதிரி மலர்களை ஏந்தி தரிசனமளிக்கிறார்.

ஆந்திர மாநில ஸ்ரீசைலம், மல்லிகார்ஜுனர் ஆலயத்தில் கைகளில் எழுத்தாணி, ஏடு வைத்துக் கொண்டு சாட்சி கணபதி அருள்புரிகிறார். கோயிலுக்கு வருவோரை சாட்சியாக குறித்து வைத்துக் கொள்ளவே இவை இரண்டுமாம். இவரை வணங்கியபின்தான் பிரமராம்பிகை சமேத மல்லிகார்ஜுனரை தரிசிக்க வேண்டும் என்பது நியதி.

காஞ்சிபுரம்வேலூர் பாதையில் உள்ள திருவலம் எனும் திருத்தலத்தில் மாங்கனிக்காக அம்மையப்பனை வலம் வந்த விநாயகரையும் அந்த விநாயகருக்கு மாங்கனியை அளித்த தனுமத்யாம்பாளையும் தரிசித்து மகிழலாம்.

சென்னையில், நங்கநல்லூர் செல்லும் வழியில் உள்ளகரம் எனும் இடத்தில் விஜயகணபதி கோயில் கொண்டருள்கிறார். இங்கு விஜயகுமாரசுவாமி, விஜயதுர்க்கை, விஜய மணிகண்டன், விஜயமாருதி என எல்லோருமே விஜய எனும் அடைமொழியுடன் வணங்கப்படுகின்றனர். இந்த ஆலயத்தில் தினந்தோறும் கணபதி ஹோமம் நடைபெறுவது சிறப்பு.

பாற்கடலை தேவர்களும், அசுரர்களும் கடைந்தபோது வந்த அமிர்தத்தை, தன்னை வணங்காததால் விநாயகர் மறைத்தார். தவறை உணர்ந்த தேவாசுரர்கள் அவரை வணங்க, அமிர்தத்தை காட்டியருளிய விநாயகரை திருக்கடவூரில் கள்ளவாரணப் பிள்ளையார் எனும் பெயரில் தரிசிக்கலாம்.

லிங்கம் போன்ற பாணத்தில் வடிவம் பெற்ற வித்தியாசமான விநாயகரை தீவனூரில் பொய்யாமொழி விநாயகர் ஆலயத்தில் காணலாம். விழுது விடாத மூன்று ஆலமரங்கள் இத்தலத்தில் மும்மூர்த்திகளாக வணங்கப்படுகின்றன.

திருப்பூவனம் திருத்தலத்தில் மந்திர விநாயகர், கற்பக விநாயகர், ஒட்டுக்கல் வெள்ளை விநாயகர் என மூன்று விநாயகப் பெருமான்கள் திருவருள் புரிகின்றனர்.

சுந்தரரும், சேரமான் பெருமானும் கயிலை சென்றபோது,ஔவையாரையும் உடன் வருமாறு அழைத்தனர்.ஔவையார் கணபதி பூஜையை முடித்துவிட்டுத்தான் வருவதாகக் கூறிவிட, அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். ஆனால், கணபதி விஸ்வரூபம் எடுத்து ஔவையை அவர்களுக்கு முன்பே கயிலையில் சேர்த்தார். அந்த திருவடிவத்தை, பெரியானை கணபதி எனும் பெயரில் திருக்கோவிலூரில் தரிசிக்கலாம்.

கங்கைகொண்டசோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயத்தில் திருப்பணி நடைபெற்றது. அப்போது திடீரென மன்னன் கணக்குப்பிள்ளையிடம் சந்தேகப்பட்டு கணக்கு கேட்க, கணக்கெழுதாத அவர் கணபதியிடம் புலம்ப, கணபதி கணக்கு விவரங்களை துல்லியமாக அவனுக்கு அறிவித்தார். அந்த விநாயகர் கணக்கு விநாயகராக இன்றும் அருள் புரிகிறார்.

காஞ்சிபுரம் காமாட்சி ஆலயத்தில், சிந்தூர கணபதி, விக்ன நிவாரண கணபதி, பிரசன்ன கணபதி, இஷ்டசித்தி கணபதி, துண்டீர மகாராஜ கணபதி, சக்தி கணபதி, சௌபாக்ய கணபதி, சந்தான கணபதி, வரசித்தி கணபதி, திருமஞ்சன கணபதி, மற்றும் சந்நதி வீதி வீ யில் ஏலேல விநாயகர் என ஏகப்பட்ட கணபதிகள் அருள்கின்றனர்.

தன் தந்தையான ஈசனை இஷ்ட தெய்வமாக வழிபட்ட நீலகண்ட விநாயகரை சுசீந்திரம் தாணுமாலயன் ஆலயத்தில் தனி சந்நதியிலும், தன் தாயைப் போல் வடிவெடுத்த விக்னேஸ்வரி எனும் விநாயக வடிவை ஆலய தூணிலும் தரிசிக்கலாம்.

நாவல், பவளமல்லி, வில்வம், அரசு, நெல்லி, அத்தி, மந்தாரை, வேம்பு, வன்னி ஆகிய ஒன்பது தலவிருட்சங்கள் சூழ வீற்றிருக்கும் விநாயகரை மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் தரிசிக்கலாம். இவரை வழிபட நவகிரக தோஷங்கள் நீங்குகின்றன.

நாட்டரசன்கோட்டை அருகே உள்ள வாணியங்குடி எனும் ஊரில் அடைக்கலம் காத்த அம்மன் ஆலயத்தில் விநாயகப் பெருமான் அம்பிகை வடிவில் வழிபடப்படுகிறார்.

காஞ்சிபுரம் திருவோணகாந்தன் தளி கருவறை மண்டபத்து முகப்பில் விநாயகர் சந்நதி ஒன்று உண்டு. அவரருகில் நமது காதுகளை ஒட்டி வைத்துக் கேட்டால் ஓம் எனும் சத்தம் ஒலிக்கிறது. அதனால் அந்த விநாயகரை ஓங்கார ஒலி விநாயகர் என்றழைக்கிறார்கள்.

ஓர் அங்குலம் முதல் ஓரடி வரை உள்ள வித விதமான விநாயகர்களை தரிசிக்க கும்பகோணம் தாராசுரம் ஐராவதீஸ்வரர் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும். சோழர் கால மன்னர்களின் அற்புதப் படைப்பு அவை.

தன் இரு அன்னையரான கங்கையும், பார்வதியும் இருபுறங்களிலும் வீற்றிருக்க திருவருள் புரியும் விநாயகரை திருநெல்வேலி காரையாரில் உள்ள அருவிக்கரையில் தரிசிக்கலாம்.

விடியல் முதல் இரவு வரை சுடச்சுட நெய் அப்பம் தயாரித்து அதை கணபதிக்கு அபிஷேகம் செய்யும் ஆலயம், கேரள மாநிலம் கொட்டாரக்கரையில் உள்ளது. பின் அந்த அப்பம் பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது.

மதுரையிலிருந்து 20 கி.மீ. தொலைவில் திருபுவனம் கோட்டை எனும் இடத்தில் விநாயக கோரக்கர் அருள்கிறார். நோய்களைத் தீர்ப்பதிலும் சனி தோஷம் தீர்ப்பதிலும் விநாயகர் வடிவில் உள்ள கோரக்க சித்தர் அருள்கிறார்.

ராமநாதபுரம் உப்பூரில் வெயிலுகந்த விநாயகர் அருள்கிறார். தட்சிணாயன காலங்களில் இந்த விநாயகரின் தெற்கு பகுதியிலும் உத்திராயண காலங்களில் வடக்கு பகுதியிலும் கதிரவன் தன் கிரணங்களால் இந்த விநாயகரை வணங்குகிறான்.

கிருஷ்ணகிரியில் உள்ள பாகலூரில் விநாயகப் பெருமான் சிவலிங்க ஆவுடையாரின் மேல் வலது கையில் ஒடிந்த தந்தத்துடனும், இடக்கையில் கொழுக்கட்டையுடனும் ஈசான்ய திக்கை நோக்கி அமர்ந்தருள் புரிகிறார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சேரன்மாதேவியில் உள்ளது மிளகு பிள்ளையார் ஆலயம். மழை பொய்த்தால் இவரது உடலில் மிளகை அரைத்துத் தடவி அபிஷேகம் செய்தால் உடனே மழைபொழியும் அற்புதம் நிகழ்கிறது.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்! .காம்









பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள
கீதா சமையல்
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்
You Tube
LIKE & SHARE


# ஆன்மீக வழியில் அமைதி

48

நமது உடல் ஸ்தூல சரீரம், சூக்ம சரீரம் என சாஸ்திரம் கூறுகிறது. சூக்ம சரீரம் என்பது நமது கண்ணுக்குத் தெரியாத மனம் என்று சுருக்கமாக புரிந்து கொள்ளலாம். நமது மனம் கர்மவினைகளின்படி அமைந்துள்ளது என சாஸ்திரம் கூறுகிறது. நமது ஸ்தூல உடல் ஒரு நியதியுடன் செயல்பட்டு இயங்கி வருகிறது. அதேபோல் நமது மனமும் அதாவது சூக்ம உடல் ஒரு நியதியுடன் இயங்கி வருகிறது.

உலகில் காணும் இன்ப துன்பங்களை அனுபவவிப்பதற்கு இருப்பிடமாக இருப்பது நமது ஸ்தூல சரீரமாகும். நமது சூக்ம சரீரம் வெளியுலகத்தில் தொடர்பு கொண்டு, நம் கர்மவினைப்படி சுக துக்கங்களை ஸ்தூல சரீரம் அனுபவவிக்கிறது. அவ்வாறு அனுபவவிப்பதற்கு இந்த சூக்கும சரீரம் ஒரு கருவியாக இருந்து செயல்படுகிறது. எனவே நமது சுக துக்கங்களை அனுபவவிக்கக்கூடியது இந்த சூக்ம சரீரமாகும்.

நமது சூக்ம சரீரம் பஞ்ச பூதங்களாக இருந்து, நாம் காணும் ஸ்தூல சரீரமாக செயல்படுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. சூக்ம சரீரத்தில் சிலருக்கு ஆரோக்கியமான நிலையில் கர்மேந்திரியங்கள் செயல்படுகிறது. மனிதர்களில் நல்ல உள்ளம் படைத்தவர்கள், புண்ணியம் செய்தவர்கள் ஆரோக்கியமான சூக்ம சரீரத்தை பெற்றவர்கள். சூக்ம சரீரம் பிறப்பிலிருந்து சிலருக்கு கர்மேந்திரியங்கள் சில குறைபாடுகளுடன் நோய்வாய்ப்பட்டு ஆரோக்கியமற்று காணப்படுகிறது. மனிதர்களில் எதிர்மறையான எண்ணம் உடையவர்கள், பாவம் செய்தவர்கள் ஆரோக்கியமற்ற சூக்ம சரீரத்தைப் பெற்றவர்கள் என்று கூறலாம்.



ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து விதமான பிராணன் மற்றும் மனம், புத்தி என்று பதினேழு இந்திரியங்களின் சேர்க்கைதான் சூக்ம சரீரம் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஸ்தூல உடலில் இருக்கும் கண்ணுக்குத் தெரியாத மனதையும் மனிதன் தன்னுடைய கர்ம வினைகளின்படி பெறுகிறான். உலகில் காணும் சுகதுக்கங்களை அனைத்தும் நாம் கர்மவினைகளின்படி மனதின் மூலம் அனுபவவிக்கிறோம்.

ஸ்தூல, சூக்ம சரீரத்தில் உள்ள ஒவ்வொரு கர்மயேந்திரியத்திற்கும் ஒரு தேவதை இருப்பதாக சாஸ்திரத்தில் குறிப்பிடப்படுகிறது. கண்கள் என்ற கர்மேந்திரியத்திற்கு சூரியதேவன் கர்மேந்திரிய தேவதையாக சாஸ்திரத்தில் குறிப்பிடப்படுகிறது.

நமது மனம் உணர்வுகளை வெளிப்படுத்தி அதனை புத்தியின் மூலம் உணரும்படி செய்கிறது. அதாவது நம்மிடம் உள்ள அன்பு, பண்பு மகிழ்ச்சி, சோகம், கோபம், பொறாமை போன்ற உணர்வுகளை மனம் வெளிப்படுத்தி அவற்றை புத்தியின் மூலம் உணரும்படி செய்கிறது. நாம் ஒரு பொருளைப்பற்றி அல்லது செயல்பாட்டைப் பற்றி பலவிதமான எண்ணங்களில் இருப்போம் அல்லது குழப்பத்தில் இருப்போம். அதுதான் மனம் என்று சாஸ்திரம் கூறுகிறது. அவ்வாறு குழப்பத்தில் இருக்கும் மனம் சிந்தித்து ஒரு தீர்வுக்கு வருவது புத்தியாகும். சூக்ம உடலாக செயல்படும் நமது மனம் சில அனுபவங்களை நிகழ்வுகளை

உணர்வுகளை தன்னுள் பதிவு செய்து கொள்கிறது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட அனுபவகங்களின் பதிவுகளை நமது ஞாபகத்துக்கு கொண்டு வருவது சித்தம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

அகங்காரம் என்றால் பொதுவாக சாதாரணமாக உலக வழக்கில் கர்வம் ஆணவம்

(Ego) என்று கூறுவோம். எந்த ஒரு எண்ணம் மூன்று சரீரங்களை ‘நான்’ என்று மனதில் எண்ணிக்கொள்கிறோமோ அந்த எண்ணங்களே அகங்காரம் என்று சாஸ்திரம் கூறுகிறது. மூன்று சரீரங்களையும் எப்பொழுதெல்லாம் ‘நான்’ என்ற எண்ணம் நம் மனதிற்குள் ஏற்படுகிறதோ அவ்வாறு ஏற்படும் எண்ணங்களே அகங்காரமாக வெளிப்படுகிறது. இந்த ‘நான்’ என்ற அகங்காரம் ஒரு மனிதனுக்கு இருக்கும்பட்சத்தில் அவன் வாழ்வில் அமைதி காண்பதற்கு முடியாது.

மனிதன் விரும்புவது தேடுவது அமைதி. அந்த அமைதி எங்கே இருக்கிறது என்று பல வழிகளில் தேடிக்கொண்டே இருக்கிறான். மனிதன் மன அமைதி பெற வேண்டுமானால் தன்னிடமுள்ள ‘நான்’ என்ற அகங்காரத்தினை முழுமையாக அகற்ற வேண்டும். ஆன்மீக வழியில் சென்றுதான் இந்த ‘நான்’ என்ற அகங்காரத்தினை அகற்ற முடியும். மனிதன் ஆன்மீக வழியில் செல்லும்போது அவனிடமிருந்து அகங்காரம் அகன்று மனம் பக்குவம் அடைந்து அமைதி பெறுகிறான். அமைதி பெற வேண்டுமானால் நமது மனம் பக்குவம் பெற வேண்டும். அவ்வாறு மன பக்குவம் அடையும்போது இந்த ‘நான்’ என்ற அகங்காரம் நம்மை விட்டு அகன்று விடும். நமது மனம் அகங்காரமற்றநிலையில் இருக்கும்போது நமது மனம் அமைதி பெறுகிறது.

நமது மனதுக்குள் என்ன இருக்கிறது அல்லது மனம் என்ன நினைத்துக்கொண்டு இருக்கிறது என்பதை சூழ்நிலை மற்றும் செயல்பாடுகளின் மூலம் ஓரளவுக்கு அறிந்து கொள்ள முடியும். ஆனால் பிறருடைய மனதில் உள்ள எண்ணங்களைப் பற்றி சாதாரண மனிதன் முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. அப்படி மற்றவர்கள் மனதில் உள்ள எண்ணங்களை அறிந்து கொள்ள

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

முடிகிறது என்று வைத்துக் கொள்வோம். அவ்வாறு எளிதில் அறிந்து கொள்ள முடிந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அதனால் இந்த 'நான்' என்ற அகங்காரம் ஒவ்வொரு மனிதனிடமும் அதிகரித்து விடும்.

ஸ்தூல, சூக்ம மற்றும் காரண சரீரரங்களுக்கு அப்பாற்பட்டது ஆத்மா. காரண சரீரம் என்பது இந்த ஸ்தூல, சூக்ம சரீரங்கள் தோன்றுவதற்கு எது காரணமாக மட்டும் இருந்ததோ அதுதான் காரண சரீரம் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஸ்தூல சரீரம் என்பது நமது கண்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடியது. சூக்ம சரீரம் என்பது நம் மனம் என்பதால் அதனை கண்களால் பார்க்க முடியாது. ஆனால் மனம் இருப்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும் என்று சாஸ்திரம் கூறுகிறது. மனம் என்று ஒன்று இருப்பதால்தான் பலவிதமான எண்ணங்கள் உதயமாகிக்கொண்டே இருக்கிறது.

உலகில் காரணம் இல்லாமல் காரியம் ஏற்படுவதில்லை. எடுத்துக்காட்டாக ஒருவன் வேகமாக ஓடுகிறான். இதில் ஓடுவது என்பது காரியம் ஆகும். குறிப்பிட்ட ரயிலில் பயணம் செய்யும்பொருட்டு ஓடலாம். அவன் ஓடுவதற்கு ஏதோவொரு காரணம் இருக்கும். அவன் காரணமில்லாமல் ஓட மாட்டான். அதேபோன்று ஸ்தூல, சூக்ம சரீரங்கள் தோன்றுவதற்கு அல்லது இயங்குவதற்கு ஏதோ ஒன்று காரணமாக இருக்கிறது. அந்த ஏதோ ஒன்றுதான் காரண சரீரம் என்று சாஸ்திரம் விளக்குகிறது.

ஸ்தூல சரீரம், சூக்ம சரீரம் உண்டாவதற்கு எது மூல காரணமாக இருந்ததோ அதுவே காரண சரீரம் ஆகும். காரண சரீரத்தை பற்றி எளிதில் புரிந்து கொள்ள வேண்டுமானால் எடுத்துக்காட்டாக, ஒரு குடும்பத்தில் மகன் இருக்கிறான். அவனுக்கு அப்பா இருக்கிறார். அந்த அப்பாவிற்கு அப்பா இருக்கிறார். அப்பாவின் அப்பாவை மகன் தாத்தா என்று அழைப்பான். மகன் யாரைத் தாத்தா என்று அழைப்பதற்கு மூல காரணம் அவனுடைய அப்பாவின் அப்பா ஆகும். அதுபோல்தான் ஸ்தூல சரீரம், சூக்ம சரீரம் உண்டாவதற்கு எது மூல காரணமாக இருந்ததோ அது காரண சரீரம் ஆகும். ஸ்தூல உடல் மற்றும் சூக்ம உடல் இரண்டும் தோன்றுவதற்கு எது மூல காரணமாக இருந்ததோ அதுதான் காரண சரீரம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

காரண சரீரத்தின் தன்மை எப்படிப்பட்டது என்று சிந்தித்துப் பார்த்தால் அது விகல்பம் என்று சாஸ்திரம் குறிப்பிடுகிறது. விகல்பம் என்றால் வேற்றுமை என்பது அதன் பொருள் ஆகும். நிர்விகல்பம் என்ற சொல் வேற்றுமையற்றது என்று பொருள் ஆகும். நம் கண்ணுக்குத் தெரியும் ஸ்தூல சரீரம் வேற்றுமை உடையது. அதனை நாம் தெளிவாக நம் கண்களால் பார்க்க முடியும். ஸ்தூல உடலில் உள்ள கையை எடுத்துக் கொள்வோம். கை விரல்கள், நகங்கள், உள்ளங்கை, புறங்கை, முழங்கை என வேற்றுமையுடன் தனித்தனியாக வேறுபடுத்தி பார்த்து தெரிந்து கொள்ள முடியும். அவ்வாறு வேறுபடுத்திக் காண்பது விகல்பம் என்று சாஸ்திரம் கூறுகிறது..

– அமைதி தொடரும்



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்



**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# நமது இதழ் வளர்ச்சிக்கு உதவ விருப்பமுள்ள வாசக அன்பர்கள்

## விருப்ப சந்தா செலுத்தலாம்

### எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை.

விருப்ப சந்தா

சந்தா அனுப்புபவர்கள்
UPI & வங்கி எண் வாயிலாகவும்
சந்தா செலுத்தலாம்

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM
Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)